www.padippakam.com

# பெண்

தொகுதி - 2 இலக்கம் - 2



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

www.padippakam.com

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை.
27 A, லேடி மனிங் ட்ரைவ்,
மட்டக்களப்பு.

**The Woman** – A journal published by
Suriya Women's Development Centre,
27 A, Lady Manning Drive,
Batticaloa.

ஆசிரியர்:

சித்திரலேகா மௌனகுரு.

அட்டை ஓவியம்: அருந்ததி.
Cover : Arunthathy.

அட்டை அச்சு:
நவமக பிறின்டர்ஸ், கொழும்பு.

அச்சகம்:
சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

விலை : 30/–

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர்களுடன்...

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகையான பெண் இந்த இதழில் தனது மூன்றாவது அடியை எடுத்து வைத்துள்ளாள்.

மூன்று மாதங்கள் தாமதமாகியே இந்த அடியெடுப்பு நடந்திருப்பினும் இது உறுதியாகவே நடந்துள்ளது.

தாமதத்திற்குக் காரணம் போதுமான அளவு ஆக்கங்கள் கிடைக்காமையே. எனினும் ஏனைய பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் ஆக்கங்கள் உரிய நேரத்தில் கிடைக்காமல் போவதற்கும், பெண்கள் சஞ்சிகைகள் இந்தப் பிரச்சனையை எதிர்நோக்குவதற்கும் இடையில் வேறுபாடு உண்டு. ஏனைய சஞ்சிகைகளுக்கு எழுதுவோர் பலதரப்பட்டவர்கள்; பெரும்பாலும் ஆண்கள். ஆனால் பெண்கள் சஞ்சிகைகள் பெரும்பாலும் பெண்கள் எழுதுவதையே எதிர்பார்க்கின்றன. அத்துடன் பெண்நிலை நோக்கில் விடயங்கள் பார்க்கப்படவேண்டும், வெளிப்படுத்தப்படவேண்டும் எனவும் கருதுகின்றன.

பெண்களுக்குச் சொல்லவேண்டியதற்கு நிறைய விடயங்கள் இருப்பினும் அவர்கள் அவற்றை எழுத்தில் கூறாமலிருப்பதற்கு முக்கியமான காரணங்கள் உள்ளன.

பொதுவாகவே எழுத்துமொழி என்பது பெண்களுக்கு உரியதாக இருக்கவில்லை. ஒருசில பெண்களே எழுத்துமொழியைத் தம் வசப்படுத்தியிருக்கிறார்கள். எழுத்தைப் பொதுத் தளங்களில் பயன்படுத்துவதற்

படிப்பகம்

www.padippakam.com

குப் பெண்கள் தயங்குகின்றனர். எழுத்துமொழி எமது சமூகத்தில் உத்தியோகபூர்வமான மொழியாகக் கருதப்பட்டிருப்பதும் இதற்குக் காரணமாகும்.

காலங்காலமாகப் பெண்களின் மொழி மூலமான ஆக்கங்களும், கருத்துகளும் பேச்சு மொழிமூலமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்வி பொதுவானதாக்கப்பட்டு எழுத்து மொழியைப் பெண்கள் கற்றாலும்கூட எழுத்துலகில் அவர்கள் பிரவேசம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதனாலேயே பெண்களிடையே ''எழுத்தாளர்கள்'' அதிகம் வளராத நிலையும் ஏற்பட்டது. ஆனால் தமது தனிப்பட்ட உலகில் எழுத்தைப் பெண்கள் அதிகமாகக் கையாளுகின்றனர். தனிப்பட்ட கடிதங்கள் எழுதுவோர் அதிகமாகப் பெண்களாயிருப்பதை இங்கு எடுத்துக்காட்டலாம்.

பேச்சாகவும், தனிப்பட்ட தளத்திலும் இயங்கும் பெண்களின் மொழி பொதுத்தளத்திற்கு வரவேண்டும் என்பதும் 'பெண்'ணினது ஒரு குறிக்கோளாகும் எனவே தாமதத்தை நாம் பெரிய தடையாகக் கொள்ளாமல் தொடர்ந்து முன்னோக்கி நடக்கவே எண்ணுகிறோம்.

பெண் சஞ்சிகைக்கு நிரந்தர ஆசிரியராக ஒருவர் இல்லை. ஒவ்வொரு இதழையும் ஒவ்வொருவர் பதிப்பிக்கின்றனர். பெண்கள் இன்று தமது ''முச்சுமை'' (வீட்டு வேலை + வீட்டுக்கு வெளியேயான ஊதிய உழைப்பு + சமூகப்பணி) காரணமாக நேர நெருக்கடியை எதிர்நோக்கும் இக்காலகட்டத்தில் இது ஒரு வசதியான ஒழுங்காக இருக்கும் என நம்புகிறேன். அத்துடன் சூரியா நிலையத்தினரது பொது இலட்சியங்களுக்கும் கருத்துகளுக்கும் மாறுபடாதபடியும் அதேவேளை வேறுபாடுகளையும், தனித்தன்மைகளையும் 'பெண்' வெளிப்படுத்துவதற்கும் இது ஒரு பொருத்தமான ஒழுங்காக அமையும் என்பதும் எமது கருத்தாகும்.

பெண்ணின் தொடர்ச்சியான பயணத்தைச் சாத்தியமாக்குவதற்கு உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். ஒத்துழைப்பீர்கள் என நிச்சயமாக நம்புகிறோம்.

— ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

# கொலைக்களங்களில் உயிர்த்துடிப்புடன் பெண்கள்

குமுதினி சாமுவல்

இலங்கை 1979ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தின்கீழ் இருந்துவருகின்றது. 1976ம் ஆண்டில் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா கொலை செய்யப்பட்ட காலத்திலிருந்து இனப்பிரச்சினையானது வன்முறை வடிவம் எடுத்துள்ளது. இப்பொழுது போர்க் கட்டங்களின் வளர்ச்சியானது அழிப்பதற்கான குறியீட்டுப் பெயர்களாக ''சத்ஜய'', ''ரிவிரச'' தற்பொழுது புதிதாக ''ஜயசிக்குறு'' என அழைக்கப்பட்டு ஒரு இராணுவ நடவடிக்கையிலிருந்து இன்னொரு இராணுவ நடவடிக்கையாகத் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் ''வெற்றி'' என்பது யுத்தத்தின் வெவ்வேறான கட்டங்களில் வெவ்வேறு அர்த்தம் அளிப்பதாக இருந்திருக்கலாம். இது சொத்துக்களையும், மக்களையும்பற்றி எத்தகைய அக்கறையுமின்றி கோரத் தாண்டவம் ஆடுகிறது. இடிந்த கட்டடங்கள், எரிந்துபோன நிலங்கள், வெறுமையான தரைத்தோற்றங்கள் என்பன யுத்தம் நடைபெறும் வலயத்தில் அல்லது அதன் எல்லைப்புறத்தில் பொதுவாகக் காணக்கூடியதாகும். அது இப்பகுதியின் நிலத்தோற்றத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சமாக உள்ளது. பெரும்பாலும் ஏற்கப்பட்டதாகவும், பெரும்பாலும் வெளியே பிண்டப் பிரமாணமாகத் தென்படாததாகவும் உள்ள மக்களின் துன்பம் தொடர்கிறது. முரண்பாட்டின் பாரிய தாக்குதல்களிலும், அதன் கொடுமையான விளைவுகளிலும் அகப்பட்ட மக்கள், தமது வாழ்க்கையை ஸ்தாபித்துக்கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து போராடிக்கொண்டுள்ளனர்.

பொதுவாக எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த குடும்பங்கள் இழப்பினை எதிர்கொண்டபோதும் வடகிழக்கு மக்கள் குறிப்பாக



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களும், முஸ்லீம்களுமே அதிக பாதிப்புக்கு உள்ளாகினர். அநேகமாக ஒவ்வொரு குடும்பமும் தாய், தந்தை, சகோதரன், சகோதரி, சுற்றத்தார் அல்லது நண்பர் முதலியோரின் இழப்பு பற்றிய கதையை மீண்டும் மீண்டும் கூறமுடியும். இராணுவ நடவடிக்கைப் பகுதிகளில் ஒவ்வொருவரும் சிலநேரங்களில் துப்பாக்கிச்சூடு, குண்டுத்தாக்குதல், விமானத்தாக்குதல் முதலியவற்றால் மன அதிர்ச்சியையும், யுத்தம் பற்றிய பயத்தையும் அனுபவித்திருக்கின்றனர். சிலர் இச்சண்டையில் காயமடைந்திருப்பதுடன் இன்னமும் காயப்படுவது தொடர்கின்றது. அப்பாவிப் பொதுமக்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சூட்டுக் காயங்கள், குண்டுச் சல்லடைத் துண்டுகள் துளைத்த அங்கங்கள், சிதைந்த உடல்கள் என்ற நிலைமை. அதிஷ்டசாலிகளோ இந் நிலைக்குத் தப்பி அடுத்த தாக்குதலில் பாதிக்கப்படுவது பற்றிய பயத்துடன் இன்னுமொரு நாளை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்கின்றனர். சிலர் உடனேயே கொல்லப்படுகின்றனர்; மேலும் சிலர் காயங்களால் வருந்தி, குணமடையாது இறக்கின்றனர்; சிலர் இத் துன்பத்தினால் பைத்தியம் பிடிக்கும் நிலைக்குச் செல்கின்றனர்; மேலும் மற்றவர்கள் யுத்தத்தைத் தொடரவிட்டு அவர்களுடைய வீடுகளிலிருந்து இடம்பெயர்கின்றனர். முடிவில்லாத பயநிலை, பயங்கரம், காயம், இறப்பு, இடப்பெயர்வு, மீளக்குடியமர்வு என்பவற்றுடன்கூடிய நிச்சயமின்மை என்கிற நச்சு வட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்படுவோர் பலராகவும் இந்த யுத்தத்தினால் ஏற்படும் அழிவு, வர்க்கம், சாதி, மதம், இனத்துவம், பால், வயது என்பவற்றைத் தாண்டிப் பலரையும் தாக்கினாலும் பெண்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். யுத்தத்தின் விளைவுகள் அவர்களுடைய வாழ்க்கையில் வித்தியாசமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆனால் இவை பற்றி உரிய அதிகாரிகளோ, தொடர்புசாதனங்களோகூட போதிய அளவு கரிசனை எடுப்பதில்லை. சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் ஒரு அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து உதவியை நாடி நின்ற ஒரு பெண்ணின் கதையானது உண்மையில் இந்த யுத்தம் பெண்களுக்கு என்ன செய்தது; அவர்கள் எவ்வாறு நிலைமைகளை அனுசரித்துப் போகவேண்டியிருந்தது என்பதனை விபரிக்கின்றது.

## கண்ணகியின் கதை:

கண்ணகி 37 வயதுடைய ஒரு விதவை. தனது 62 வயதான தாயாருடனும், 18 வயது மகன், 15 வயது மகள் ஆகியோருட



படிப்பகம்

www.padippakam.com

னும் மட்டுநகரிலிருந்து மேற்காக சில கிலோமீற்றர் தூரமுள்ள திருப்பெருந்துறைக் கிராமத்தில் வாழ்கிறாள்.

கண்ணகியின் சிறுபராயமும், திருமணமும் :

கண்ணகி சிறுபிள்ளையாய் இருந்தபோது தாய் தந்தையருடன் கல்லடியில் வாழ்ந்தாள். அவர்கள் கடற்கரை ஓரமாக வாழ்ந்து கொண்டு ஜீவனோபாயத்துக்காக மீன்பிடித் தொழிலைப் புரிந்தனர். கண்ணகி மூத்தமகள். அவளுடைய ஏழு வயதிலிருந்தே கண்ணகியும், அவளுடைய சகோதரனும் அவர்களுடைய தந்தையுடன் அவரின் மரத்தோணியில் மீன்பிடிக்கச் செல்வார்கள். அவளுடைய சகோதரி தகுந்த வயதை அடைந்ததும் அவளும் கடலில் மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்பட்டாள். பெண்கள் கடலுக்குச் செல்லக்கூடாது என்னும் பழைய வழக்கத்தை அவர்களுடைய குடும்பம் அசட்டை செய்தது.

மிக விரைவில் இரு பிள்ளைகளும் வலையைப் பாவிக்கும் முறையையும், தோணியைச் செலுத்தும் முறையையும் கற்றுக்கொண்டனர். கண்ணகி தனது பன்னிரண்டாவது வயதில் தனது சகோதரனுடன் தாங்களாகவே தோணியை எடுத்துச்சென்று மீன் பிடித்து தமது கைச்செலவிற்கான பணத்தைப் பெற்றனர். அந்தவேளை அவர்களுடைய தந்தை தன்னுடைய பாவனைக்கு ''பைவர்'' தோணியை வாங்கினார். 1977ஆம் ஆண்டில் அக்குடும்பம் திருப்பெருந்துறைக்குச் சென்றது.

கண்ணகி தனது பதினெட்டாவது வயதில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு மீனவனைத் திருமணம் செய்தாள். அவனுடன் அக்கிராமத்தைச் சுற்றியுள்ள வாவியில் மீன் பிடிக்கத் தோணியில் செல்வாள். இவ்வாறு பத்து வருடங்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு தமது குடும்பத்திற்கான வருவாயைப் பெற்றனர். கண்ணகியினுடைய தந்தையின் முற்போக்கான மனப்பாங்கு அவளைத் திறமையுள்ள மீனவளாக மாற்றியதுடன் அதனை அவள் தனது தொழிலாகக் கொண்டதால் அக்கிராமமும் அவளைச் சிறந்த ஒரு ''மீன்பிடிக்கும் பெண்ணாக'' ஏற்றுக்கொண்டது.

## முரண்பாட்டின் பாதிப்பு :

கணவனின் இறப்பு :

1988ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் திருப்பெருந்துறைக் கரையோரப் பகுதியில் முகாமிட்டது. இதனால் இராணுவ முகாமினைச் சுற்றியுள்ள வாவியில் இரவில் மீன் பிடிப்பதை இந்திய இராணு



படிப்பகம்

www.padippakam.com

வத்தினர் தடைசெய்தனர். தொழில் பாதிக்கப்பட்டதால் கண்ணகியின் கணவன் இந்திய இராணுவத்தின் முகாமிற்குக் கூலி வேலை செய்வதற்காகச் சென்றான். கிராமத்தவர்கள் இந்திய இராணுவத்தின் முகாமிற்குச்சென்று வேலை செய்வதை விடுதலை இயக்கம் ஒன்று தடைசெய்தது.

ஆனால் கண்ணகியின் கணவன் தனது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாகத் தொடர்ந்தும் முகாமிற்கு வேலைக்குச் சென்றான். இதன காரணமாக அவன் கொல்லப்பட்டான்.

சகோதரனினதும் உறவினரதும் மரணம் :

கண்ணகி தனது சகோதரனுடன் சேர்ந்து தொடர்ந்தும் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றாள். 1989ஆம் ஆண்டில் அவளுடைய சகோதரனும். அவனது சில நண்பர்களும் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் விசேட அதிரடிப்படையினர் இளம் ஆண்களைப் பிடித்துத் துன்புறுத்தி அல்லது அவர்களைக் கொலைசெய்யும் கொடுமைவாய்ந்தவர்களாக இருந்தனர். அவர்களைக் கண்டபோது பீதியில் ஓடுவதற்குக் கண்ணகியின் சகோதரர் எத்தனித்தார். ஆனால் விசேட அதிரடிப்படையினர் வெடி வைத்தனர். கண்ணகியின் சகோதரன் கொலை செய்யப்பட்டான். அவன் இறக்கும்வேளையில் அவனுக்கு வயது இருபத்திநான்கு.

1996இல் மீண்டும் அக்குடும்பத்தில் அவலம் தொடர்ந்தது. செப்டெம்பர் மாதம் 28ம் திகதி கண்ணகியின் மருமக்களில் நால்வரும், மைத்துனியின் கணவரும் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலிலிருந்து லொறி ஒன்றில் வீடு திரும்பும் வேளையில் முஸ்லீம் ஊர் காவல்படைக் குழுவினரால் கொலை செய்யப்பட்டனர்.

குடும்பத்தின் பராமரிப்புக்காகத் தொழில் செய்தல் :

கண்ணகி தனது கணவன் இறந்த காலத்திலிருந்து தொடர்ந்து மீன்பிடித் தொழிலைச் செய்தாள். இரவு மீன்பிடித்தல் அனுமதிக்கப்பட்டதும் அவள் தனது தோணியை பிற்பகல் 5-30 மணியளவில் எடுத்துச்சென்று முதலாவதாகப் பிடிக்கப்பட்ட மீன்களுடன் இரவு 9-00 மணிக்கு வீடு திரும்பி வருவாள். அவளுடைய மகன் அம்மீன்களை ஐஸ் பெட்டியினுள் அடைத்து அடுத்த நாட் காலை 7-00 மணிக்குச் சந்தைக்கு எடுத்துச்செல்வான். கண்ணகி மீண்டும் விடியற்காலை 2-00 மணிக்குத் தோணியை எடுத்துச்சென்று இரண்



படிப்பகம்

www.padippakam.com

டாவதாகப் பிடித்த மீன்களுடன் விடியற்காலை திரும்பிவருவாள். அவை ஒவ்வொரு நாளும் காலை 9-00 மணிக்குச் சந்தைக்கு எடுத்துச்செல்லப்படும். நிறைய மீன்கள் படும் காலத்தில் விசேடமாக 1995 ஜனவரியிலிருந்து ஏப்பிரல் மாதம் வரை போர் நிறுத்தப்பட்டிருந்த காலத்தில் ஒரு நாளைக்கு அவள் கூடியளவு 1000 ரூபாய் வரை உழைக்கக்கூடியதாக இருந்தது. இப்பணத்தில் ஒரு பகுதியைச் சேமித்தாள். குடிநீர் பெறவும் துணை வருமானம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் வீட்டுத்தோட்டம் அமைக்கவும் அவர்களுடைய வளவில் கிணறு ஒன்றைக் கட்டி முடித்தது. போர் நிறுத்தம் முடிந்து மீண்டும் சண்டை ஏற்பட்டபோது மீன் பிடிச் சமூகத்திற்கு மீன் பிடித்தல் தடை விதிக்கப்பட்டது. வாவியின் ஊடாக ஆகாயப் படைத்தளமும், முகாமும் தாக்கப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவதற்காகவே இத்தடை விதிக்கப்பட்டது.

மீன்பிடிக் குடும்பங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு நட்ட ஈடாக இரு மாதங்களுக்குக் கூப்பன் பொருட்கள் வழங்கப்பட்டன. ஐந்துபேருக்கு அதிகமான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் மாதம் ஒன்றுக்கு 1200/- பெறுமதியான பொருட்களைப் பெற்றனர். சிறு குடும்பங்கள் மாதம் ஒன்றுக்கு 850/- பெறுமதியான பொருட்களைப் பெற்றனர். கிராமத்தவர்களின் விண்ணப்பத்தின் பெயரில் வருடக் கடைசியில் இத்தடை ஓரளவு நீக்கப்பட்டது.

முற்பகல் 10-00 மணியிலிருந்து பிற்பகல் 4-00 மணிவரை வாவியில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கு அங்கீகாரத்தைப் பெறும் பொருட்டு முகாம் அதிகாரியிடம் தமது தேசிய அடையாள அட்டையை ஒவ்வொரு தோணிச் சொந்தக்காரரும் ஒப்படைக்கும் முறையை முகாம் ஏற்படுத்தியது. தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு முற்பகல் 9-00 மணியளவில் முகாமிற்கு வரும்படியும் தோணியை முகாமில் ஒப்படைத்துத் தமது அடையாள அட்டையைத் திரும்பப் பெறுவதற்கு மாலை 4-00 மணிக்கு முகாமிற்கு வரும்படியும் தோணிச் சொந்தக்காரர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

கண்ணகிக்கு அனுமதிச் சீட்டை வழங்குவதற்கு முகாம் தலைவர் மறுத்துவிட்டார். ஒரு பெண் தோணியில் வாவியில் மீன் பிடித்து உழைப்பதை அவர்கள் நம்பவில்லை. ஆனால் அவள் தனது மகனை ஒவ்வொரு நாட் காலையிலும் அனுமதிச்சீட்டைப் பெறுவதற்கு அனுப்பி மாலை வேளையில் தோணியைக் கரையில் சேர்ப்பதற்கு இணங்கியதன்பேரில் மீன் பிடிக்க அனுமதித்தனர். இக்காலகட்டத்தில் கண்ணகியின் வருமானம் மிக மோசமாக



படிப்பகம்

www.padippakam.com

வீழ்த்தப்பட்டது. தனதுவலையைப் புதுப்பித்தெடுப்பதற்கு வட்டியில்லாக் கடன் ஒன்றைப் பெறும்பொருட்டு பெண்கள் நிறுவனம் ஒன்றின் உதவியை அவள் நாடவேண்டி இருந்தது. ஆனால் அவள் மீன் பிடித்ததுடன் மேலதிக வருமானத்திற்காக வீட்டுத் தோட்டத்தையும் தொடர்ந்து செய்தாள்.

வாழ்தலுக்கான மீள்முயற்சி :

1997 பங்குனி மாதத்தின் முதலாவது வாரத்தில் விடுதலைப் புலிகளுக்கும் வவுணதீவு முகாம் இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட பெரிய போரில் 275ற்கு மேலான இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் இறந்ததாகக் கூறப்பட்டது. இது 1995இல் போர் நிறுத்தம் முறிவடைந்த பின்னர் கிழக்கில் ஏற்பட்ட பாரிய தாக்குதலாகும். இதன்விளைவாக வவுணதீவுப் பகுதியை வளைத்துள்ள வாவியில் மீன் பிடித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. திருப்பெருந்துறை மீன்பிடிக் கிராமமும் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் கிராமத்தவருக்கு இழந்த வருவாய்க்காக நட்டஈடு கொடுக்கப்படவில்லை.

கண்ணகி ஒவ்வொரு நாள் பின்னேரமும் தனது வலையைக் கட்டுவதற்கு வாவியில் கழுத்தளவு ஆழத்தில் நீரில் இறங்கவேண்டி உள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் விற்பனை செய்வதற்காகப் பிடிக்கும் மீன்களைச் சேகரிப்பாள். ஆழமில்லாத நீரில் மீன் படுவது மிகக் குறைவாகும். அத்துடன் செத்தல், காரல், யப்பான், திரளி போன்ற சிறு இனம் மாத்திரமே பிடிபடும். இவற்றால் நாள் ஒன்றுக்கு 100/- ரூபா அளவிலேயே பணம் கிடைக்கும். இவ் வருமானத்தைக் கொண்டு அவளுடைய குடும்பத்திற்கு உணவு அளிப்பதுடன் கடனையும் திருப்பிக் கட்டவேண்டும். இதனால் கடன் வழங்கும் காலகட்டத்தை நீடிக்கும்படி தனக்கு உதவிய பெண்கள் நிறுவனத்துடன் கதைத்துள்ளாள். அவளுடைய நிலை மேலும் மோசமடையும் விதமாகச் சில வாரங்களுக்கு முன்னர் யாரோ ஆற்றினுள் விரிக்கப்பட்டிருந்த அவளுடைய வலையை வெட்டிக் களவெடுத்துள்ளனர். இப்பொழுது அவளிடமிருந்த மிஞ்சிய மூன்று வலைத்துண்டுகளுடன் மீன் பிடித்து அவ் வலையை வாங்குவதற்குப் பெற்ற கடனைத் திருப்பிக் கட்டவேண்டியும் உள்ளது.

## பெண்களும், யுத்தத்தின் அரசியலும் :

இலங்கையின் இனப்பிரச்சினை, குறிப்பாக அதன் ஆயுதப் போர்க்கட்டமானது இங்குள்ள பெரும்பாலான சனத்தொகையின்



படிப்பகம்

www.padippakam.com

மும்முரமான பங்கெடுப்பு அல்லது ஈடுபாடு இல்லாமல் நடத்தப் படுகின்றது. எந்தவிதமான காரணங்களாக இருந்தாலும் பிரச் சினைக்குரிய முடிவைப் பெறுவதற்குக் கடைப்பிடிக்கப்படும் எந்த விதமான வழிகளாக இருந்தாலும் யுத்தத்தின் விளைவுகள் அதிக மாக அப்பாவிப் பொதுமக்களையே பாதிப்பதாக உள்ளன. குறிப் பாகச் சொன்னால் மேலே சொல்லப்பட்ட கண்ணகியின் கதை யானது யுத்தத்தின் விளைவுகள் வித்தியாசமான மட்டங்களில் பெண்களை எவ்வாறு பாதித்தன என்பதனைக் காட்டுகின்றது.

போரின்போது நிகழும் வன்முறை, இறப்பு, அழிவு, காயம் என்பவற்றை விளைவிக்கின்றது. தந்திரோபாய நலன் சார்பாக எழும் பலாத்காரம், கொல்லுதல், சிறைவாசம், சித்திரவதை, காணாமல்போதல், பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றை விளை விளைவிக்கின்றது. அடையாளத்தையும், தனித்தன்மையையும் உறு திப்படுத்தும் நடவடிக்கைகளின்போது இனத்துவ வன்முறையானது வேற்றார் எனக் கருதப்படுவோரை அகற்றுதல், படுகொலை, தீவைப்பு, இனத்துப்பரவாக்கம் என்பவற்றை விளைவிக்கின்றது. சமூக, பொருளாதார வன்முறையானது இடம்பெயர்தல், அநா தரவு, பொருளாதார நிலையற்ற தன்மை, பௌதீக பாதுகாப் பின்மை, உளவியற்தாக்கம் என்பவற்றை ஏற்படுத்துகின்றது. இந்த வன்முறைகள் எல்லாமே பெண்களை வெகுவாகப் பாதிக்கின்றன.

இந்தப் பிரச்சினையின்போது தமிழ் விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற சண் டையின்போதும் அப்பாவிப் பொதுமக்கள் தவிர்க்கமுடியாதளவு பயன்படுத்தப்பட்டார்கள் என்பது தெளிவாகும். இவ்வாறான ஒரு நிலையில் கைப்பற்றிய இடங்களில் ''ஆக்கிரமிப்பு இராணு வத்துடனான'' உறவின் எல்லைகள் எவை என்பதைக் காட்டக் கண்ணகியின் கணவனின் கொலையானது ஒரு உதாரணமாகும். இந்தக் கொலையின் ஒரு விளைவானது கண்ணகியை விதவையாக ஆக்கியதுடன் ஒரு தனிமையான தாயாக அவளுடைய அன்னை, சகோதரங்கள், பிள்ளைகள் ஆகியோரின் பொறுப்பையும் அவள் மேல் சுமத்தியது. அவளுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தாகிய அரசியலின் நடவடிக்கைகள் அவளுடைய நடவடிக்கையை மாற்றியதால், அவள் தன்னுடைய பெண் என்ற பால் நிலையி லான பங்களிப்பு முறையை மாற்றுமாறும், தனிப்பட்ட வாழ்க்கை யிலும், பொது வாழ்க்கையிலும் பொறுப்புக்களை ஏற்குமாறும் தள்ளப்பட்டாள். இந்த நிலைமையில் வாழ்வதற்காகப் புதிய திறன்களைப் பெறவேண்டியிருந்ததுடன், அவளுடைய புதிய சூழ் நிலைக்கேற்றவாறு அவள் தன்னை இசைவாக்கம் செய்யவேண்டி யும் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

கண்ணகியின் கதைகூடப் போருக்கும் சமாதானத்திற்கும் இடையில் எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கும் எல்லைகளையும அல்லது நெருக்கடியிலிருந்து உறுதிப்பாடான நிலைக்குச் செல்லும் தொடர்ச்சியையும் தெளிவாகக் காட்டுவதாய் உள்ளது. ''சாதாரண நிலைக்கான'' தோற்றம் ஏற்பட்டதும் வாழ்க்கையை மீளமைப்புச் செய்ய எடுக்கப்படும் முயற்சி; அம்முயற்சியில் பிடிவாதமாகக் கட்டப்படுகின்ற நம்பிக்கைகள், அபிலாசைகள், இவை யாவும் சண்டையினிடையே அகப்பட்ட மக்களின் வாழ்க்கையையோ, மீட்பையோபற்றி அக்கறைகொள்ளாத போரிடும் தரப்பினராலும், போரினாலும் காலத்திற்குக் காலம் இரக்கமின்றி உடைத்தெறியப்படுகின்றன.

பெண்களுக்கு உதவி செய்வதற்கென்று அமைக்கப்பட்ட பெண்கள் நிறுவனம் ஒன்றின் வாசலில் ஒரு காலைப்பொழுதில் வந்து சேர்ந்த ஒரு சாதாரண பெண்ணே கண்ணகி. அவள் இறுதியான ஒரு தஞ்சமாக ஆழமில்லாத நீரில் மீன்பிடிப்புக்குரிய வலை வாங்குவதற்குக் கடனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். முன்பு கண்ணகி குறிப்பிட்டுக் காட்டக்கூடிய அளவு சுயாதீனத்துடன் வாழ்ந்த, பெருமையுள்ள, ஆழ்கடலில் மீன்பிடிக்கும் ஒரு பெண்ணாக இருந்தாள். அத்துடன் அவளுடைய தொழில் தெரிவானது, மரபுக் கட்டுப்பாடுகளைத் துணிவுடன் உடைத்தெறிந்து வாழ்ந்ததாக இருந்தது. ஆனால் அவள் தற்போது அந்நிய அதிகாரத்தின் முன் அதன் கட்டளைகளுக்குத் தலை வணங்கத் தள்ளப்பட்டிருக்கிறாள். அவள் எங்கு, எவ்வாறு வேலை செய்யவேண்டும் என்பதையும் இராணுவமே தீர்மானிக்கின்றது.

பல்வேறு அரசியல் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளின் விளைவுகள், மேலும் பிரச்சினையின் காரணங்கள், விளைவுகள் ஆகியவற்றின் பால்சார் இயல்பு என்பன பெண்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. போர் பற்றிய பால்நிலை நோக்கானது பெண்கள், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல் அல்லது ஆண்களுக்குப் பதிலாகத் தடுத்து வைக்கப்படுதல் முதலிய பெண்களுடைய பால் அடிப்படையில் அமைந்த துஷ்பிரயோகங்களுக்கு விசேஷமாக இலக்காகியுள்ளார்களா என்பதை ஆராய்கிறது.

அத்துடன் இத்துஷ்பிரயோகங்களின் விளைவுகள் ஆண்களையும், பெண்களையும் பாதிக்கும் முறை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதையும் ஆராய்கின்றது. உதாரணமாக நெருக்கடி காரணமாக ஆண்களும் பெண்களும் இறக்கக்கூடும். ஆனால் பெண்கள் அவர்களது பால்நிலை பற்றிய சமூகப் பார்வையால் அளிக்கப்படும் விதவை என்கின்ற பெயரைச் சுமக்கவேண்டி இருக்கின்றது. தந்தையின் பங்களிப்பு இல்லாத, தனித்த அன்னையராகக் குடும்பத்தின் உயிர் வாழ்தலுக்குப் பொறுப்பு எடுக்கவேண்டியவர்களாக ஆகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

முக்கிய பிரச்சினையாக இருப்பது என்னவெனில் இந்தப் புதிய நிலைமையை எதிர்கொள்வதற்குரிய பரிகாரங்கள் போதியளவு இல்லாமையாகும். பெண்கள், புதிய சமூகப் பாத்திரங்களை வகிக்கின்றபோதும் அவர்கள்பற்றிய சமூகப்பார்வை மாறாது அப்படியே இருக்கும் என்னும் யதார்த்தத்துடன் தொடர்ந்து போராடவேண்டும். குடும்பத்திற்கு ஆதார வருமான உழைப்பாளர்களாக இருந்த போதிலும் அது அங்கீகரிக்கப்படுவதில்லை எனும் விடயத்துடன் அவர்கள் போராடவேண்டும். இவ்வாறான புதிய பாத்திரப் பங்களிப்புகளுக்கு உதவும் வகையில் ஊக்குவிப்புச் செய்வதற்கான கொள்கைகள் உருவாக்கப்படவில்லை அல்லது அவர்களை எதிர்நோக்கும் புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவக்கூடிய கட்டுமானங்கள் எதுவும் இல்லை என்ற நிலைமையை எதிர்கொண்டும் அவர்கள் சிரமப்படவேண்டியுள்ளது.

பெண்களுடைய மனித உரிமைகள் பற்றிய வினா மேலும் அக்கறைப்படவேண்டிய ஒரு விடயமாகும். இவைகள் சிவில், அரசியல் உரிமைகளிலிருந்து சமூக, பொருளாதார, கலாசார உரிமைகள் வரை முழு விடயங்களையும் உள்ளடக்கவேண்டும். இவ்வாறான பகுப்பாய்வுகள், உரிமை மீறல்கள், அவற்றின் விளைவுகளுக்கும் சமூகத்தில் பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலைக்கும் இடையில் உள்ள தொடர்பினை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

மேலும் இலங்கையில் உள்ள சட்டமுறைமையில் வீட்டின் தலைவராக மாறிய விதவைகளினதும், பெண்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எந்தவிதமான சட்டவிதிகளும் இல்லை. குறிப்பாக யுத்தம், அரசியல் வன்முறை நிலவும் சூழ்நிலையில் இதுவரை காலமும் சட்டரீதியாகக் குடும்பத் தலைவராகக் கருதப்பட்ட ஆணின் இறப்பு, காணாமற்போதல் போன்றவற்றால் குடும்பத் தலைமைக்குத் தள்ளப்படுகின்ற பெண்கள் சம்பந்தமாக சட்ட முறைமையானது எத்தகைய விதிகளையும் சொல்லவில்லை.

நெருக்கடி நிலவுகின்ற வலயத்தில் சனத்தொகையின் அரைவாசிக்கு மேல் பெண்கள் காணப்படுகின்றனர். இவர்கள் பால் அடிப்படையில் பாரபட்சப்படுத்தப்படுவதும், உரிமைகள் மீறப்படுவதும் தடைசெய்யப்படவேண்டும். பெண்களது பால் நிலைமையின் அடிப்படையில் விசேட வடிவம் பெறும் வன்முறைகள்பற்றி அதிக அக்கறை காட்டப்படவேண்டும்.

(*நன்றி :* ஒப்ஷன்ஸ் – ஒகஸ்ட் 1997)

*தமிழாக்கம் :* வெ. அழகரத்தினம்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவரமணி கவிதைகள்

சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த சிவரமணி கவிதைகள் (1993) என்ற தொகுப்பில் அடங்கிய இருபத்திமூன்று கவிதைகள் தாம் சிவரமணி எழுதியவற்றுள் எஞ்சியிருந்தவை என எண்ணியிருந்தபோது இதுவரை வெளியாகாத சில கவிதைகள் எதிர்பாராத விதமாகக் கிடைத்தன. அவற்றுள் ஒன்று தலைப்பிடப்படாத இக்கவிதை.

எல்லோருடைய முகங்களிலும்
ஊரடங்குச்சட்டம்
அமுல்படுத்தப் பட்டுள்ளது.

அமைதி
ஒரு முதலையின்
அகலத் திறந்த வாயோடு
முகத்தை விழுங்கிக் கொண்டிருந்தது.
உரத்து உரத்துப் பேசியதும்
புரிந்து கொள்வதற்கல்ல
மேலும்
யாருக்கும் பேசத் தெரியவில்லை
சத்தமிட்டனர்.
சிரிப்பதும்
சூத்தைப் பல்லை கழட்டுவது போல்தான்.



படிப்பகம்

www.padippakam.com

பரிமாறப்பட வேண்டிய விஷயங்களுடன்
ஒரு வார்த்தை
தேடி எடுக்கப்பட்டால்
அது
நட்சத்திரங்களின் மொழியில் கூட
சொல்லப்படலாம்.

அதுவரை
உலகை நோக்கி
ஒரு முற்றுப் புள்ளியும்
கேள்விக் குறியும்.

இன்றைய பொழுதில்
மகிழ்ச்சியாய் இருப்பதும்
துன்பப்படுவதும்
வித்தியாசமற்றுப் போகிறது.

யாருமே எதுவுமே செய்ய முடியாத
இந்த நிமிஷங்களில்
ஒவ்வொருத்தனும்
ஒரு இருண்ட கதவில்
தன் தலையை மோதிக் கொள்கிறான்.

எல்லா வாசல்களிலும் காயாத இரத்தம் ....



படிப்பகம்

www.padippakam.com

# நாவற்குடா கிழக்கு உழைக்கும் மகளிர் சங்கத்தின் உதயமும், செயற்பாடுகளும்

— சி. ஸ்ரீவள்ளியம்மன் —

நாவற்குடா கிழக்கு கிராமம் மட்டக்களப்பு நகரிலிருந்து 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு கிறிஸ்த சமய மக்களும், இந்து சமய மக்களும் வாழ்கிறார்கள். இங்குள்ள மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தலாகும். அத்துடன் தச்சுத்தொழில், மேசன் தொழில் என்பவற்றுடன் அரசாங்க நிறுவனங்களில் வேலை செய்பவர்களும் உள்ளனர். சூறாவளிக்கு முன் பெண்கள் கிடுகு பின்னல், கொப்பரா காயவைத்து எண்ணெய் உருக்கல், தோட்டம் செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுவந்தனர்.

1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாகத் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதால் இந்தத் தொழில்களைச் செய்யமுடியாமற் போய்விட்டது. அத்துடன் அரசியற் பிரச்சினையும் இக்கிராம மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. எனவே இங்குள்ள பெண்கள் முக்கிய தொழிலாக நண்டுக்கூடு இழைத்தலில் ஈடுபட்டனர். அத்தொழிற்குரிய மூலப்பொருள் உள்ளூரில் கிடைக்கக்கூடியதாக இருந்ததுடன் வருமானம் பெறத்தக்கதாக இருந்தமையும், இங்குள்ளவரின் தொழிற்குரிய பிரதான உபகரணமாக நண்டுக்கூடு காணப்பட்டமையும் நண்டுக்கூடு இழைத்தலில் பெண்கள் ஆர்வத்துடன் ஈடுபட ஏதுவாயிற்று.

காலக்கிரமத்தில் மூலப்பொருள் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. இதனால் தூர இடங்களில் இருந்து நண்டுக்கூடு இழைத்தலுக்குத் தேவையான பிரம்புகளைப் பெண்களால் பெற முடியவில்லை. இதனால் அவர்களின் நண்டுக்கூட்டுத் தொழில்



படிப்பகம்

www.padippakam.com

வீழ்ச்சியடைய பொருளாதாரப் பிரச்சினை ஏற்படத்தொடங்கியது. வசதியுள்ளவர்கள் மூலப்பொருளைப் பெற்று இத்தொழிலைச் செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் கூலிக்காகச் செய்யும் நிலை உருவாகியது. இதனால் வருமான ஏற்றத்தாழ்வு, சுரண்டல், போட்டி, ஒற்றுமையின்மை என்பன மக்களிடையே தோன்றின. இந்நிலையில் கிராமத்தின் ஒற்றுமைக்கும், வருமான மேம்பாட்டுக்கும் உதவிகள் தேவைப்பட்டன. இங்குள்ள சில பெண்களின் வேண்டுகோளுக்கு இணங்க சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் இக்கிராமத்தை 1996ம் ஆண்டு ஆய்வு செய்தது. அந்த ஆய்வின்போது பின்வரும் பல விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பெண்களின் முக்கிய தொழிலாக நண்டுக்கூடு இழைத்தல் காணப்பட்டது. கூடுதலாகப் பெண்களது வருமானத்திலேயே குடும்பத்தின் அன்றாட அத்தியாவசிய வாழ்க்கைச் செலவுகளை மேற்கொள்ளவேண்டிய நிலை இருந்தது. ஏனெனில் ஆண்களின் உழைப்பு பெண்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் குறைவாகும். மேலும் அறியாமையால் மக்களிடையே சேமிப்புப் பழக்கம் திருப்திகரமாக இருக்கவில்லை. பொருளாதார நிலையும் தாழ்ந்த நிலையில் இருந்தது. அப்பெண்கள் தங்களின் தொழிலின் மதிப்பை அறியாமல் இருந்தார்கள்; அத்தோடு வெளி நடப்புகளை அறியும் சந்தர்ப்பமும் இவர்களுக்கு இருக்கவில்லை என்ற நிலை ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்டது.

அத்துடன் நண்டுக்கூட்டுத் தொழிலில் ஆண்கள் தலையீடு செய்ததால் பெண்கள் சமூகத்துக்குக் கட்டுப்பட்டு ஆண்களுடன் போட்டிபோட முடியாமல் இருந்தனர். மற்றும் பெண்களிடையே ஒற்றுமையின்மை காணப்பட்டதுடன் வேறு தொழில்களைப் பெறுவதும் சிரமமாகவே இருந்தது. குடும்ப வேலைகளில் பெண்களின் பங்களிப்பே அதிகமாக இருந்தது. கூட்டுத் தொழிலுக்குரிய மூலப்பொருள் வேறு இடங்களில் இருந்து பெறக்கூடியதாக இருந்தும் அதற்குரிய பணம் இக்கிராமப் பெண்களிடம் இருக்கவில்லை என்ற நிலைமைகளும் புலனாகின.

எனவே பெண்களின் வருமான முன்னேற்றத்திற்காகவும்; அவர்களின் ஒற்றுமைக்காகவும் அவர்களிடையே ஓர் விழிப்புணர்ச்சியைக் கொண்டுவரவும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் முயற்சித்தது. இக்கிராமப் பெண்களில் நண்டுக்கூட்டுத் தொழிலில் ஈடுபடும் வசதியற்ற குடும்பங்களிலுள்ள 18 பெண்களை இணைத்து 23-5-96ந் திகதி அன்று 'நாவற்குடா கிழக்கு உழைக்கும் மாதர் சங்கம்'' ஒன்றை அமைத்தனர். இதன் அங்கத்தவர்கள் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்திடமிருந்து வட்டியில்லாக் கட



படிப்பகம்

www.padippakam.com

னைப் பெற்றுத் தொழில் செய்கின்றனர். தற்போது அவ் வருமானத்திலிருந்து மாதா மாதம் கடனைத் திருப்பிக் கட்டிவருவதுடன் சங்கத்தில் சேமிப்பை உருவாக்கியுள்ளனர். இவர்களுக்கு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் கிராமத்தின் வளங்கள் பற்றியும், சேமிப்புப் பற்றியும் இரண்டு நாள் கருத்தரங்குகளை நடத்தியது. அத்துடன் அந்நிலையம் நடத்தும் விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறையில் சங்கத்தில் இரண்டு அங்கத்தவர்களைப் பங்குபெறச் செய்து அதன்மூலம் ஏனைய சங்கத்து அங்கத்தவர்களுக்கும் பெண்கள்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றது.

இச்சங்கம் தொடங்கிய ஒரு வருடகாலத்திற்குள் மகளிர் தினம், மனித உரிமைகள் தினம் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதுடன் பங்களிப்பையும் செய்துவருகின்றது. சூரியாவின் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பிலும் இச்சங்கம் அங்கத்துவம் வகிக்கின்றது. மற்றும் இங்குள்ள பெண்கள் சங்கத்தினுடன் ஒற்றுமையாக இணைந்து சில கொண்டாட்ட தினங்களை நடத்துகின்றது. தற்போது நண்டுக்கூட்டுத் தொழிலில் சுரண்டல் நிலை குறைந்து அனைவரும் சமமான வருமானம் பெறக்கூடியதாகவுள்ளதுடன் பெண்களே வேறு இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்யக்கூடிய நிலையில் இருந்துவருகிறார்கள். இந்த வருமானத்தின் மூலமும், சேமிப்பு மூலமும் சில்லறை வியாபாரம் செய்தல், தோட்டம் செய்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது அவர்களிடையே வரும் பிரச்சினைகளைச் சங்கத்தினூடாகத் தீர்த்துக்கொள்கின்றனர். பல விடயங்கள்பற்றி அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கூடுதலாகக் கிடைக்கின்றது. "நாட்டின் இதயம் கிராமத்திலேயே தங்கியுள்ளது" எனும் காந்தியின் வாக்குக்கிணங்க இச்சங்கமானது இனி வரும் காலங்களில் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து பெண்களுக்கான முன்னேற்றத்தில் கூடிய அக்கறை காட்டும் என நம்புகிறேன்.

"பொருட்களை விட மக்கள் முக்கியம்பெறும் ஒரு சமூகத்தை நாம் வேண்டுகிறோம். பிள்ளைகள் பெறுமதியுள்ளவர்களாகக் கருதப்படும் சமூகமே எமக்குத் தேவை. மக்கள் மனிதத்தன்மையுடையோராகவும், மென்மையானவர்களாகவும், மற்றையவர்களைப்பற்றிய அக்கறை உடையோராகவும் உள்ள சமூகத்தையே நாம் உருவாக்கவேண்டும்."

— ஆக்பிஷப் டெஸ்மண்ட் டுடு.



படிப்பகம்

www.padippakam.com

# கீதாவுடன் ஒரு நேர்காணல்

*நேர்கண்டவர் : றஞ்சி.*

வ. கீதா தற்காலத் தமிழ்நாட்டுச் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர். பண்பாடு, அரசியல், இலக்கியம் ஆகிய துறைகளில் அடிக்கடி எழுதிவருபவர். இவர் ஒரு சமூகவியலாளரும் ஆவர். தமிழகத்து எழுத்தாளரான எஸ். வி. இராஜதுரையுடன் இணைந்து ஈ.வே.ரா. பற்றி ஒரு பாரிய நூலை எழுதியுள்ளளார். இது தவிர அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள் என்ற மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதியின் இணை ஆசிரியரும் கூட. சென்னையில் 'சிநேகிதி' என்கின்ற பெண்கள் அமைப்பில் இணைந்து செயல்படுகிறார். பேர்லின் நகரிலிருந்து வெளியாகிய பெண்கள் சந்திப்பு மலரில் (1996) இடம்பெற்றிருந்த இந் நேர்காணலை இங்கு நன்றியுடன் மறு பிரசுரம் செய்கிறோம்.

○ *தமிழ்நாட்டில் பெண்ணிய இயக்கங்களின் பலம், பலவீனம் மற்றும் அதன் செயற்பாட்டுத்திறன் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

*தமிழ்நாட்டில் எந்தளவு பெண்ணியம் சம்பந்தமான வேலைப்பாடுகள் அமைந்துள்ளன? இது எவ்வாறு சாதாரண பெண்களைச் சென்றடைகிறது?*

□ *தமிழ்நாட்டில் தற்சமயம் இயங்கிவரும் பெண்ணிய இயக்கங்களை - ஒரு வசதிக்காக - மூன்று வகையாகப் பிரிக்கலாம்.*

*கட்சி சார்ந்த அமைப்புகள், ஏனைய அரசியல் கட்சிகளின் மகளிர் அணிகள். இவற்றுள் நெடுங்காலமாகச் செயல்பட்டு வரும் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கமும் (இது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு உடையது) அடங்கும். தன்னார்வக் குழுக்களின் முயற்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள மாதர் சங்கங்கள், பெண்கள் தலைமை தாங்கி நடத்தும்*



படிப்பகம்

www.padippakam.com

மகளிர் விடுதலை அமைப்புகள், மகளிரை மட்டுமே உறுப்பினராகக் கொண்டு இயங்கும் தன்னார்வ நிறுவனங்கள் ஆகியன இரண்டாவது வகை இயக்கத்தில் அடங்கும். இவற்றுள் பல அயல்நாட்டிலிருந்து பெறப்படும் உதவித் தொகை கொண்டு இயங்கிவருகின்றன. சில உள்நாட்டு நன்கொடைகள் திரட்டி செயல்பட்டு வருகின்றன. மூன்றாம் வகை இயக்கத்தில் கட்சிசாராத, சுயாதீனமான வகையில் செயல்பட்டு வரும் பெண்கள் அமைப்புகள், ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடங்கும். இவற்றின் உறுப்பினர்கள் தாம் சம்பாதிக்கும் பணத்தின் ஒரு பகுதியை அமைப்புப் பணிகளுக்கு ஒதுக்குவர்.

பெண்ணிய இயக்கங்கள் கிராமப்புறங்களிலும், சில நகரங்களிலும், சிறு நகரங்களிலும் செயல்படுகின்றன. குறிப்பிட்ட பகுதிகளுக்குரிய பிரச்சினைகளை - சுற்றுச்சூழல், சாதி, மதப் பிரச்சினைகள், கொத்தடிமை என்பன போன்ற பிரச்சினைகள் முதல் பெண்கள் பெண்களாக இருப்பதால் எதிர்கொள்ளும் பிரத்தியேகப் பிரச்சினைகள் ஈறாகப் பெண்ணிய அமைப்புக்கள் பலவற்றில் தலையிட்டு பெண் விடுதலை, சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்வுகளை உருவாக்க முயற்சி செய்து வருகின்றன.

கோட்பாட்டளவில் ஒருமித்த கருத்துக்கள் மகளிர் அமைப்புகளுக்கிடையே இல்லை என்றாலும் பெண்கள் சகித்து வாழும் அன்றாட வன்முறைகள், பாலியல் பலாத்காரம், சாதி மதக் கலவரங்கள் உருவாக்கும் வன்முறைச் சூழல், சாதி, வர்க்கம் காரணமாகச் சில சமூக வகுப்புக்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் தனிச் சிறப்பான பிரச்சினைகள் / சுமைகள் ஆகியன குறித்த சில நிலைப்பாடுகள் ஏறக்குறைய அனைத்து அமைப்புகளுக்கும் பொதுவானவையாக உள்ளன. அதாவது பெண், பெண்ணாக இருப்பதால் சந்திக்கும் வன்முறை, பெண் தலித்தாகவும், முஸ்லிமாகவும், உழைக்கும் வர்க்கப் பெண்ணாகவும் இருப்பதாலும் சந்திக்கும் பொருளாதார, பண்பாட்டு, சமூக ஒடுக்குமுறைகள் ஆகியவற்றை எதிர்கொண்டு புதிய விழுமியங்கள், புதிய உறவுகள் ஆகியவற்றை விளக்கும் ஒரு பெண்ணிய அரசியலின் தேவையை அனைத்து மகளிர் அமைப்புகளும் உணர்ந்து செயல்பட்டு வருகின்றன.

பெண்கள் சந்திக்கும் அடக்கு / ஒடுக்குமுறைகள் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானவைதான் என்றாலும், பெண்களும் கூட சாதி, மத, வர்க்கப் பிரிவுகளைக் கடந்தவர்கள் அல்லர் என்ற கருத்து பெண்கள் அமைப்புக்களின் விவாதங்களில்



படிப்பகம்

www.padippakam.com

விவாதிக்கப்பட்டு வருகிறது. சாதிப் பிரச்சினை, வர்க்கப் பிரச்சினை ஆகியவற்றுடன் தொடர்புடையதுதான் பெண்கள் பிரச்சினையும் என்ற புரிதல் இன்று பல இடங்களில் காணப்படுகிறது. பல்வேறு வகையான, காரசாரமான, ஆனால் ஆக்கபூர்வமான விவாதங்கள் பெண்கள் அமைப்புக்களில் பெண்களுக்கிடையே நடைபெற்றுவருவது எமது நாட்டுப் பெண்ணிய இயக்கத்தின் பலம்.

பலவீனம்: சில பொதுப் பிரச்சினைகளில் வன்முறை, பஞ்சாயத்து, தேர்தலில் பெண்கள், பெண்களும் குடும்பக் கட்டுப்பாடும் (இதன் அரசியலை விமர்சித்தல்) - பெண்கள் அமைப்புக்கள் அவ்வப்போது இணைந்து செயற்பட்டாலும், தொடர்ந்து ஒரு அணியாக இயங்க முடிவதில்லை. இரண்டாவதாக, பெண்ணியம் பற்றிய கோட்பாட்டு ரீதியான விவாதங்கள் பெண்கள் அமைப்புகளிடையே நடைபெறாமை. குறிப்பிட்ட தலைப்பில் / குறிப்பிட்ட பிரச்சினையை ஒட்டி கருத்து, விவர பரிமாற்றங்கள் நடைபெற்றாலும், there is no serious and sustained dialogue on politics, power, sexulity.

○ பெண்ணியம் சம்பந்தமான புதிய கோட்பாட்டுப் புரிதல்கள் அல்லது புதிய போக்குகள் தமிழகச் சூழலில் எந்தளவில் உள்ளன?

□ 'பழைய' வரலாற்று ரீதியான புரிதல்கள்கூட - எடுத்துக்காட்டாக, பெரியார், சுயமரியாதை இயக்கத்தினர் முன்வைத்த பெண்ணியக் கருத்துக்கள் - நமது கூட்டு நினைவில் தெளிவாக இடம்பெறாத நிலையில் புதிய புரிதல்களைப் பற்றி என்ன சொல்வது? சில தனிப்பட்ட நபர்கள், அமைப்புக்கள் முதலியன பாலியல், குடும்பம், ஆண் - பெண் உறவு, பெண் - பெண் உறவு / தோழமை குறித்துப் பேசியும் விவாதித்தும் வருகின்றனர். இருந்தாலும் இயக்கங்களின் செயல்பாட்டினை / செயல்பாடுகளைப் பாதிக்கும் அளவுக்கு இவ் விவாதங்கள் அமையவில்லை. பெண்கள் இயக்கங்களின் அக்கறைகள், செயல்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி அறியமாட்டாமல் சிலர் குறிப்பாக ஆண் அறிவாளிகள் - 'புதிய' பெண்ணியக் கருத்துக்களை விவாதித்தும் அவற்றைப்பற்றி எழுதியும் வருகின்றனர். ஒரு பெண்ணிய அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இத்தகைய விவாதங்களின் அரசியல் பொருத்தப்பாட்டை என்னால் சரிவர உணரமுடியவில்லை. செயல்பாடும் சொல்லும் பின்னிப்பிணைந்த நிலையில் ஒன்றை மற்றொன்று வடிவமைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணிய அரசியல் சூழலில், ''சொல் அதுவே(யும்?) சிறந்த செயல்'' என்ற கருத்து வினோதமானதாக எனக்குப் படுகிறது.

○ உங்களுக்கும், தலித் பெண்ணிய அமைப்புகளுக்கும் இடையில் கூட்டு வேலைமுறைகள் ஏதாவது உண்டா?

□ நான் சார்ந்து பணிபுரியும் 'சிநேகிதி பெண்கள் அமைப்பு' குடும்ப வன்முறைக்குப் பலியாகும் / சகித்து வாழும் பெண்களுக்கான ஆதரவு மையமாக இயங்கிவருகிறது. பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்ணின் – தலித் பெண்களின், வன்னியர் இனப் பெண்களின், ஆசாரி வகுப்பைச் சேர்ந்தவர்களின், பார்ப்பனப் பெண்களின், கிறிஸ்தவ, முஸ்லிம் பெண்களின், குடிசைவாழ் பெண்களின், நடுத்தர வகுப்புப் பெண்களின், 'பூர்சுவா' மேட்டுக்குடிப் பெண்களின் - வாழ்க்கை அவலங்கள், அன்றாட தொல்லைகள் குறித்து நேரடியாக அறிய வாய்ப்புப்பெற்ற எங்களுக்கு சாதி, மதம், வர்க்கம் ஆகியன எல்லாப் பெண்களையும் ஒடுக்கும் விதத்தைக் காண முடிகிறது. உயர்சாதிப் பெண்கள், நடுத்தர வர்க்கத்துப் பெண்களுக்கு இது உடனடியாகப் பிடிபடுவதில்லை. தலித் இனப் பெண்களுக்கும், உழைக்கும் பெண்களுக்கும் இது ஒரு சாதாரண உண்மை. பெண்கள் என்ற அடிப்படையில் நாங்கள் ஒரு தோழமையை, கூட்டுறவை உருவாக்கி செயல்பட்டு வருகிறோம்.

சாதியைக் கடந்து வந்துவிட்டோம் என்று நான் கூறவில்லை. நான் எதிர்கொள்ளும் ஆணாதிக்கமும், தலித் பெண் ஒருவர் எதிர்கொள்ளும் வன்முறையும் ஒன்றாக இருக்கமுடியாது. நான் அப் பெண்ணின் வேதனையை முழுமையாக உணரக் கூடியவளா என்பதுகூட எனக்குத் தெரியாது. எனக்கு வாய்த்துள்ள சலுகைகள், நான் சுவீகரித்துள்ள செல்வாக்கு (படிப்பு, வேலை) ஆகியவை என்னைப் பொறுத்தவரை merely accidental தான். எந்த வகையிலும் நான் என்னளவில் அவற்றுக்கு உரியவள் அல்ல ஆனால் ஒரு பெண் என்ற வகையில் பிற பெண்களையொத்த உடலமைப்பை உடையவள் என்ற வகையில், என்னால் பிற பெண்களுடன் பாசம், நேசம், காதல், தோழமை கொண்டாடமுடிகிறது. அவ்வாறு கொண்டாடுவதில் அடங்கியுள்ள ஆனந்தத்தை, நிம்மதியை சொற்களால் விவரிக்கமுடியாது சாதி, வர்க்க வேறுபாடுகள் கொண்ட சமுதாயத்தில் ஒரு சிறிய பெண்ணிய தோழமை உலகை உருவாக்குவதில் - a women's space - நானும் எனது தோழிகளும் முனைந்துள்ளோம்.



படிப்பகம்

www.padippakam.com

○ குடும்பம் என்பது ஆணாதிக்கம் செயற்படும் ஒரு நிறுவனம் என்ற வகையில் குடும்ப அமைப்பு முறையை எப்படி எதிர் கொள்வது என்பதைக் கூறமுடியுமா?

□ குடும்ப அமைப்பின் அடித்தளம் வன்முறை. ஆண் – பெண் உறவின், குறிப்பாக கணவன் – மனைவி உறவின், பாலியல் உறவின் தன்மை இவ்வன்முறையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆணாதிக்க குடும்ப அமைப்புக்குரிய பாலியல் தத்துவம் வன் முறையைத் தனது ஒவ்வொரு கோட்பாட்டிலும், செயலிலும், ஏன் மொழியிலும்கூடக் கொண்டுள்ளது. இத்தகைய வன் முறையை அடித்தளமாகக் கொண்ட சமூக அமைப்பானது பெண்ணைப் பாலியல் கருவியாகவும், சமூக பொருளாதார மறு உற்பத்தியைச் சாத்தியப்படுத்தும், மிக அவசியமான (ஆனால் இழிச்செயலாகக் கருதப்படும்) குடும்ப உழைப்பை மேற்கொள்ளும் குடும்ப உழைப்பாளியாகவும் பாவிக்கிறது. இதை - குடும்பத்தை மாற்றி அமைப்பதும், எதிர்கொள்வதும் - requires nothing none or less then a war between the sexes. The family is the ultimate site of the class struggle and in the final analysis, every man has to fight this war with himself, with his masculinity, his patriarchal conscience (இருபாலாருக்கும் இடையிலான ஒரு போருக்குக் குறைவானதல்ல. வர்க்கப் போராட்டத்தின் இறு தித் தளம் குடும்பமாகும்; இறுதி ஆய்வில், ஒவ்வொரு ஆணும் இந்தப் போரை தன்னுடன், தனது ஆண்மையுடன், தனது தந்தைதியாக்க உணர்வுடன் நடத்தவே வேண்டும்) - பெண் கள் தமது தோழமையின் அடிப்படையில், புதிய உறவுகளை (திருமணம் என்ற சட்டகத்துக்குள் புக விரும்பாத உறவுகளை) உருவாக்கிக்கொள்வதன் மூலம், இருக்கக்கூடிய குடும்ப அமைப்பை ஜனநாயகப் படுத்துவதன்மூலம் ஆணாதிக்கக் குடும்ப அமைப்பை எதிர்கொண்டு வருகின்றனர்.

○ சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் மாற்றத்திற் குட்படாத நிலையில் குடும்பக் கலைப்பை முன்வைப்பது பெண் களை இன்னமும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடும் என்ற கருத்தில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

□ குடும்பம் பெண்ணை வதைக்கும் களம். ஆனால் வரலாற்றின் விநோத முரண் என்னவென்றால் இக்களம்தான் இன்றைய சூழ வில் அவளுக்குள்ள புகலிடம். ஆனால் இப்போதுள்ள குடும்ப அமைப்பை அப்படியே பாதுகாக்க இதை ஒரு வாதமாகப் பயன் படுத்தக்கூடாது. பெண்கள் அமைப்புக்கள் பெண்ணுக்கு ஆதர வும், தஞ்சமும் தரக்கூடிய மாற்றுக் களங்களாக அமையலாம்.



படிப்பகம்

www.padippakam.com

○ கருச்சிதைப்பை ஒரு சிசுக் கொலையாக உருவகிப்பது மதரீதியான மரபுவழிப்பட்ட சிந்தனையின் ஒரு தாக்கம் எனக் கொள்வதில் உங்களுக்கு முரண்பாடு உண்டா?

☐ கிறிஸ்துவ, இஸ்லாமிய மதச் சிந்தனையின் தாக்கம் பதிந்த சமுதாயங்களில் கருச்சிதைவு இவ்வாறு விவரிக்கப்பட்டு ஒரு மாபெரும் விவாதத்துக்கு வழிவகுத்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இங்கு முற்றிலும் வேறானதொரு Politics of reproduction நிலவுகிறது. கருச்சிதைவானது குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் ஏழைப் பெண்களின்மீது திணிக்கப்படும் ஒன்றாக, பெண் கருவை அழிக்கும் முறையாக, ஆண் பிள்ளை ஆசையை நிவர்த்திசெய்ய (மறைமுகமாக) உதவும் வழியாகக் காணப்படுகிறது. இங்கு 'choice' politics என்பதற்கு என்ன பொருள் இருக்கமுடியும் - முன்றில் ஒரு பெண்ணுக்குக்கூடத் தனது பாலியல் வாழ்வின் தன்மையை, போக்கை நிர்ணயிக்க இயலாத / முடியாதபோது . ?

○ ஆண்களின் பாலாதிக்கத்திற்கு எதிராக ஓரினச் சேர்க்கையை முன்மொழிவதுபற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

ஓரினச் சேர்க்கை என்பது ஆண்களைப் பொறுத்தவரை குதவழியான உடலுறவு முறையைப் பிரதானமாய் உள்ளடக்கிய ஒன்று. எனவே ஓரினச் சேர்க்கைமூலம் ஒருவன் தன்னை ஒரே நேரத்தில் ஆணாகவும், பெண்ணாகவும் உணரமுடியும் என்று சொல்லப்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரை இந்த உணர்வை நிறைவு செய்யமுடியுமா? முடியாது எனின், ஓரினச் சேர்க்கையை ஆண்கள் முன்மொழிவது என்பதுகூட ஒரு ஆணாதிக்க வகைப்பட்ட சிந்தனைதான் என்று கொள்வதில் தவறு உண்டா?

☐ ஓரினச் சேர்க்கை என்று மொழியாக்கம் செய்யப்பட்டுவரும் 'Homo sexuality' என்பது எல்லா நாடுகளிலும், சமுதாயங்களிலும், ஒரேபடித்தானதாக இருப்பதில்லை. இந்தியாவில், இந்தியாவின் பல்வேறு சமூக சூழல்களில் ஆண்களுக்கிடையே நெருங்கிய பிணைப்பும், நட்பும், பாலியல் உறவும் காணப்படுவதும், அவ்வாறு பெண்களுக்கிடையேயும் நெருங்கிய உறவும், தோழமையும் காணப்படுவதும் அதிசயமில்லை. We are a segregated society and our most intense, intimate relationships are usually learnt under one of our own sex.

ஓரினச் சேர்க்கை என்பது ஆணை, ஆணாகவும் பெண்ணாகவும் ஒரேசமயத்தில் அடையாளங்கொள்ள / உணரமுடிகிறது என்ற



படிப்பகம்

www.padippakam.com

கருத்து எனக்கு வியப்பூட்டுகிறது. பல ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் அப்பட்டமான பெண் வெறுப்பாளராகவும் (Misogynists) இருக்கின்றனரே!

ஓரினச் சேர்க்கையோ, வேறு எந்தவகைச் சேர்க்கையோ ஒரு நபர் மேற்கொள்ளும் தேர்வுதானேயன்றி ஒரு பாலியல் நியதியல்ல. எவ்வகை உறவாயினும் அது (ஒருவரது) ஆதிக்கத்தை நிலைநாட்டக்கூடிய உறவாக உருமாற்றப்படலாம். சேர்க்கையின் வடிவத்தைக் கொண்டு பாலியலின் அரசியலை, அதன் 'முற்போக்கு', 'பிற்போக்கு'த் தன்மைகளை மதிப்பீடு செய்வதும்கூட உடலை அதாவது மானுட உடலை – பொருள் தன்மையுறச் செய்வதற்கு (reification) ஒப்பாகும் என்பது என் கருத்து.

○ சாதியும் பால்நிலையும் சந்திக்கும் புள்ளியில் பெண் ஒடுக்குமுறையை அடையாளம் காண்பது எந்தளவில் சரியானது? இந்திய நிலைமையிலும் வளர்ச்சியடைந்த இந்த நாடுகளிலும் செல்லுபடியாகக்கூடிய ஒன்றா?

□ சாதி என்பது ஒரு விதத்தில் நிறவெறி / இறுமாப்பு போன்றதுதான். பெரியார் ஒருமுறை கூறியதுபோல், அது நம் எல்லோரிடையேயும் ஏணிப்படிபோல் காணப்படும் ஒன்று. இந்து-இந்திய சமுதாய – பொருளாதார அமைப்பினை, ஏற்றத்தாழ்வுகளை, முரண்களை கட்டிக்காத்து ஒடுக்கப்படும் மாந்தர் அனைவரும் ஒன்றாக இணைவதைச் சாத்தியமற்றதாக்கியே சாதி செயல்படுகிறது. குறிப்பிட்ட சாதியின் அடையாளத்தை, 'மானத்தை' காப்பவள் / உறுதிப்படுத்துபவளாக இருப்பவள் பெண். அவள் சாதியின் கட்டுக்கோப்பைத் தகர்த்தெறிய முற்பட்டாலோ அல்லது அவள் சார்ந்திருக்கும் சாதியை இழிவுபடுத்த அயல்சாதி ஆண்கள் அவளை 'மானபங்கப்படுத்தினாலோ', உயர்சாதி ஆண்கள் தலித், பழங்குடியினப் பெண்களைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கினாலோ - இவை அனைத்தும் குறிப்பிட்ட சாதியின் கட்டுப்பாட்டைக் குலைக்கும் செயல்கள். எனவே சாதியும் பால்நிலையும் அதாவது சாதி அடையாளமும், சாதி சமுதாயத்தில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பால்நிலைப் பாத்திரமும் ஒன்றை மற்றொன்று சார்ந்து இயங்குவதால் இவை இரண்டும் சந்திக்கும் புள்ளியானது பெண்ணியப் போராட்டத்தின் முக்கிய களங்களில் ஒன்றாகிறது.

சாதியடையாளம் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்துவதன்மூலம், அக்கட்டுப்பாட்டினூடாக உறுதி செய்யப்படுகிறது:



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாறே சமய, பண்பாட்டு, தேசிய, இன, நிற அடையாளங்களும் நிலைநிறுத்தப்படுகின்றன. பொஸ்னிய முஸ்லிம்களுக்குப் 'பாடம்' கற்பிக்க சேர்பியர்கள் கையாண்ட வழிமுறை, முஸ்லிம் பெண்களின்மீது திணிக்கப்பட்ட மிகக் கோரமான பாலியல் வன்முறைச் செயல்கள்தான் என்பதை நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

○ ஈழத் தேசிய விடுதலைப் போராட்ட நிலைமையில் கவனத்திற்குட்படுத்தப்படவேண்டிய கேள்விகளில் ஒன்று இது. இன்று பெருமளவில் பெண்கள் ஆயுதம் ஏந்தியுள்ளனர். இது சமூக மதிப்பீடுகள் சிலவற்றை உடைத்து நொருக்கியிருந்தாலும் அடிப்படையில் பெண்கள்பற்றிய மதிப்பீடுகளை நொருக்கிவிடவில்லை. குறைந்த பட்சம் கேள்விக்குள்ளாக்கியதாகக்கூட இல்லை. இந்த நிலைமையில் போராட்டம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபின் அல்லது இதிலிருந்து விலகிக்கொண்ட பெண்களைச் சமூக மதிப்பீடுகள் வஞ்சித்துவிடும் அபாயம் உள்ளது. இதுபற்றி உங்கள் கருத்து?

இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் நேரத்தில் ஆணாதிக்கத்தால் ஒடுக்கப்படும் பெண்களுக்குப் போராட்டம் என்பது இரட்டை நிலைப்பட்ட ஒன்று எனும்போது, தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் உதிரிகளாகச் செயற்படுவதா? அமைப்புகளாகக் கலந்து போராடுவதா சிறப்புடையதாக இருக்கும்?

☐ இன்று ஈழத்திலும், உலகின் வேறு பல இடங்களிலும் நடைபெற்றுவரும் தேசிய இனப் போராட்டங்களில் பெண்கள் பல்வேறு நிலைகளில் பங்கேற்றுவருகின்றனர். ஒரு பெண் தன்னைப் 'பெண்ணாக' மட்டும் உணர்ந்து வாழ்வதில்லை. குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சேர்ந்தவளாக, குறிப்பிட்ட மொழியைப் பேசுபவளாக, குறிப்பிட்ட மதசார்புடையவளாகத் தன்னை உணர்கிறாள். எனவே தேசிய இனப் போராட்டங்களில் அவள் பங்கேற்பதில், அப்போராட்டத்தில் ஆயுதம ஏந்திச் செயல்படுவதில் எந்த அதிசயமும் இருக்கமுடியாது. ஆனால் போர், அது ஏற்படுத்தும் நாச விளைவுகள், அது உருவாக்கும் எதேச்சதிகார அரசியல், பெண்களைப் போர்ச்சூழல் பாதிக்கும் விதம் – இவற்றைப்பற்றிய பெண்ணிய மதிப்பீடுகள் அவசியம். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களால் - இன்றைய ஈழப்போராட்டச் சூழலில் – இதைச் செய்ய முடியாது என்றே எனக்குப் படுகிறது. ஏனெனில் ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தன்மை, உள்ளடக்கம் முதலியவற்றை விமர்சித்தால் அன்றி மேற்கூறிய விமர்சனத்தை அவர்களால் மேற்கொள்ளமுடியாது.




படிப்பகம்

www.padippakam.com

தமிழகத்திலும் சரி, ஈழத்திலும் சரி, தேசிய அடையாளம் என்பது 'இனமானம்', 'இனப்பெருமை' என்பன போன்றவற்றினூடாக வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. இங்கு 'மானம்' என்பது பெண்களின் 'கற்பு', 'மானம்' போன்றவற்றுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகிறது. தமிழகத்தைக் 'கன்னித்தாயாக' உருவாக்கும் சொற்பிரயோகங்களைப்பற்றி நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறு விளக்கப்படும் தேசிய அடையாளம் பெண்கள் ஏற்று தமதாக்கிக்கொள்ளக்கூடிய அடையாளமாக இருக்கமுடியாது. ஏனெனில் பெண்ணின் பாலியலைக் குறிப்பிட்ட வடிகால்களுக்குள் செலுத்தி / முடக்கிச் செயல்படும் இவ்விளக்கம் பெண்களை அந்நியப்படுத்தும் ஒன்றாக விளங்குகிறது. எந்தவொரு சிந்திக்கும் பெண்ணாலும் இந்த அடையாளத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

தேசிய இனப் பிரச்சனை, அதற்கான தீர்வுகள் ஆகியவற்றைப் பெண்ணிய நிலைப்பாட்டிலிருந்து விளக்குவதும், தேசிய இனப் போராட்டத்துக்குப் பெண்ணிய உள்ளடக்கம் வழங்குவதும் தான் பெண்களை ஆக்கபூர்வமான வகையில் போராட்டத்துடன் இணைக்க உதவும். ஆனால் இதற்கு முன் நிபந்தனையாகவும், போராட்டத்தின்போதும் குடும்பம், சாதி, மதம், 'தமிழ்ப் பண்பாடு' முதலியனவற்றை மறுவிளக்கம் செய்வதும் மாற்றியமைக்க முயற்சி செய்வதும் அவசியம்.





படிப்பகம்

www.padippakam.com

# கடலை... கடலை

— கமலாதாஸ் —

ஐஸ்மித் அலுவாலியா தனது நாலு வயது மகள் பித்துவின் மேலைக் கழுவித் துடைத்து முடித்தபோது, அவளது வீட்டினருகே அந்த முச்சக்கரவண்டி வந்து நின்றது. அதில் குர்தாஸ்பூரிலிருந்து வருடாவருடம் வரும் அவளது தாயார் வந்திருந்தார்.

''நீங்கள் வழமையாகக் குருநானாக் ஜெயந்திக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதானே வருகிறனியள்'' ஐஸ்மித் ஆச்சரிய மகிழ்ச்சியில் குழறினாள், ''எது எப்படியென்றாலும் எதிர்பார்ப்பதற்கும் முன்னமே நீங்கள் வந்தது சந்தோஷம்தான்''

''இரண்டு நாளைக்கு முன்னம் கெட்ட கனவொன்று கண்டனான்'' என்றபடி வர்ணம் பூசிய றங்குப் பெட்டியுடன் இறங்கினாள் தாய், ''எங்கடை பித்துக் குஞ்சு என்னைக் கேட்டு அழுவதாய்க் கனவு கண்டன்''

ஐஸ்மித்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட குழந்தை பித்து, முன்னால் விரைந்து தனது பேர்த்தியாரின் முழந்தாள்களை இறுகக் கட்டிக்கொண்டாள்.

கிழவி ''ரெயில்வே ஸ்ரேசனிலை பேசினதுக்கு மேலாலை ஒரு சதமும் தரமாட்டன்'' என்றாள் முச்சக்கர வண்டிக்காரனிடம்.

''குர்தாஸ்பூரிலை தனிக்கட்டையாகச் சீவிக்கிற வயதுபோன விதவை நான். பால் வித்து அப்பிடி இப்பிடியாச் சீவியத்தைத் தள்ளிறன். நானுனக்கு ஐந்து ரூபாய்க்கு மேலாலை ஒரு சதமும் தரமாட்டன்''

ஐஸ்மித்துடைய சல்வாரின் கீழே தகதகக்கும் கால்களை நோக்கித் தனது பார்வையை வீசிக்கொண்டே, ''நான் உங்களிட்டை ஒரு சதமும் கூடக் கேக்கேலையே தாயே'' என்றான் முச்சக்கர வண்டிக்காரன்.



படிப்பகம்

www.padippakam.com

''உங்களிட்டை காசெடுக்க வேண்டாமென்றாலும் சொல்லுங்கோ, ஒரு சொல்லு, எதிர்ப் பேச்சில்லாமல் போயிடுறன்'' என்று வழிந்தான் வண்டிக்காரன்.

கிழவி மடியில் சொருகி இருந்த துணிப்பையை எடுத்து அதனுள்ளிருந்து ஐந்துரூபாய்த் தாளை எடுத்தாள்.

துணிப்பை வீங்கிப் புடைத்திருப்பதை ஜஸ்மித் பெரு மகிழ்வுடன் அவதானித்தாள்.

முச்சக்கரவண்டி அந்த இடத்திலிருந்து புறப்பட்டுப் போன பிறகு, ''தேனீர் குடித்தால் நல்லாயிருக்குமல்லவா?'' என்று தாயிடம் கேட்டாள் ஜஸ்மித். கிழவி உடனே குழம்பிப்போனாள்

''எத்தினை தரம் நானுனக்குச் சொல்லிப்போட்டன் தேனீர் குடிக்கிறது தோலின்ர நிறத்துக்குக் கூடாது என்று; முப்பது வயதைத் தாண்டாட்டாலும் வயதுபோன தோற்றம் கொண்டிருக்கிறதிலை ஆச்சரியமில்லை; நீ வெண்ணெய் பாவிக்கிறதில்லையோ? றோகிணி ஒரு நாளைக்கு பதினெட்டுப் பைந் பால் தாறாள்; அதை நீ நம்புவியா? ஒண்டு அல்லது இரண்டு பைந்தை எடுத்துக் கொண்டு மிச்சத்தை வித்துப்போடுவன்; நானுனக்கு ஒரு தகரப் பேணி நிறைய வெண்ணெய்க்கட்டி கொண்டுவந்திருக்கிறன்; பித்துவின்ர பெயரில தபால்கந்தோரிலை கணக்குத் திறக்க முன்னூறு ரூபாயும் கொண்டுவந்திருக்கிறன்''

கிழவியின் விசாலமான இடுப்பில் குழந்தை ஏறுவதைப் பார்த்துக்கொண்டே ''உங்களுக்கு நிறைஞ்ச மனசம்மா'' என்றாள் ஜஸ்மித்.

''உன்ர படிப்பாளிப் புருஷன், அவர்தான் வாத்தியார் எப்பிடி இருக்கிறார்?'' கிழவி கேட்டாள் ''இப்பவும் இரவில பிந்தித்தான் வாறவரோ?''

''அம்மா, அவர் என்னோட நல்ல மாதிரியெண்டு உங்களுக்குத் தெரியும்; அவர் கெட்ட பெண்டுகளைச் சந்திக்கப் போறதுமில்லை; தவறணையில குடிக்கப் போவதுமில்லை; எனக்கும் பிள்ளைக்கும் சாப்பாடு போடப் போதுமானளவு உழைக்கிறதுக்கு அவர் ரியூசன் சொல்லிக் குடுக்கப் போறவர். ஒவ்வொரு ரியூசனிலயும் அறுபது ரூபாய் சம்பாதிப்பார்; பள்ளிக்கூடத்திலை ஒவ்வொரு நாளும் எட்டு மணித்தியாலம் படிப்பிச்சு உழைக்கிறதுக்கு மேலாலை ஆறு ரியூசனிலையும் உழைச்சுப்போடுவார்.

''காலம் கெட்டுக்கிடக்கு மகள்; பின்னேரங்களிலை நீ தனியனாய் இருக்கிறது நல்லதில்லை மகள்''



படிப்பகம்

www.padippakam.com

''இது பாதுகாப்பில்லாத இடமில்லையம்மா; எல்லாருக்கும் எங்களைத் தெரியும்; இந்த அயலிலை ஒருத்தரும் எங்களுக்குத் தீங்கு செய்யமாட்டினம்''

''இங்கையும் மற்றச் சனங்களும்... இந்துக்களும்... வாழுதுகள்'' என்றாள் கிழவி.

''இந்துக்களோடை என்ன பிரச்சினையம்மா ? அவையளுக்கையும் சீக்கியர்போல நல்லவையும் இருக்கினம், கெட்டவையும் இருக்கினம்''

''அப்ப நீ சீக்கியரையே குற்றங்காணத் தொடங்கிற்றா?'' என்று கண்களை உருட்டியவாறே சத்தம் வைத்தாள் கிழவி. அவளுடைய இதயத்துடிப்பை நிறுத்திவிடுமாப்போல குழந்தையை நெஞ்சோடு இறுக அணைத்துக்கொண்டாள்.

''கடந்த மாதங்களிலை எங்களின்ர சனத்துக்கு என்ன நடந்ததெண்டு உனக்குத் தெரியாதா ஐஸ்மித்? உன்ர கெட்டிக்கார வாத்தியார் பத்திரிகையள் ஒண்டும் படிக்கிறதில்லையா? உனக்குத் தெரியுமா அகல்தகற்றில் என்ன நடந்ததெண்டு? அப்படியான செயலை எப்பவாவது மன்னிக்கமுடியுமா?''

''இந்த விசயங்களொண்டும் எனக்குத் தெரியாதம்மா'' என்றாள் ஐஸ்மித்.

''அரசியல் பற்றி அக்கறைப்படுகிற பொம்பிளையில்லை நான்; குழந்தையைப் பார்த்துக்கொள்ளுவன்; அவருக்குச் சமைச்சுப்போடுவன்; இவை மட்டும்தான் என்ர கடமையள். நாட்டைப் பார்த்துக் கொள்ள பிரதமரை விட்டுவிடுவம்''

''ஏ... ஏ... என்ன திறமான குட்டிப் பிரசங்கம்... சோம்பேறி... ஆர்வமில்லாதவள் நீ .. உன்ர இனசனம் வதைபடேக்கை நீ கவலையில்லாமல் இருப்பாய் இல்லையா?''

கடலை .. கடலை என்று கதவுக்கு வெளியில் நின்று கத்தினான் கடலைக்காரன். ''எங்கட பித்துக் குஞ்சுவுக்கும் கொஞ்சக் கடலை வைச்சிருக்கிறன்''

''அதாரது?'' பேரக்குழந்தையை விரைவாகத் தரையில் இறக்கியபடியே கோபத்தில் புருவமுயரக் கேட்டாள் கிழவி. எழுபது வயதளவில் இருக்கும் கடலைக்காரன் தலையில் கூடையொன்றைச் சுமந்திருந்தான்.

வீட்டுத் திண்ணையில் கூடையை இறக்கியபடியே இருள் படர்ந்திருந்த வீட்டுக்குள் பார்த்து;



படிப்பகம்

www.padippakam.com

''தங்கச்சி அடுப்புப் பத்த வைச்சிட்டியெண்டால் குடிக்கச் சூடாய் ஏதாவது தா, குளிரடிக்கிற காலைவேளை; நெஞ்சிழுக்கத் தொடங்கிற்றுது; எண்ணை பிழிகிற மெசின்போல; நெஞ்சுக்குள்ள கரகரக்கிற சத்தத்தை ஆக்களாலை கேட்கலாம்''

''என்ன துணிவிருந்தா என்ர மகளிட்டை சுடுதண்ணி தரச் சொல்லிக் கேட்பாய்? இந்த வீட்டிலை இந்தமாதிரிச் சுதந்திரம் எடுக்க நீ ஆர்?''

கடலைக்காரன் கைகளைக் கட்டியபடி கிழவியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''இந்த அயலிலை மிகவும் பரிச்சயமான ஆள் நான் பெரியம்மா; ஆனால் இந்த முறைதான் உங்களைச் சந்திக்கிறன்; என்ர பெயர் குருச்சரண்; சொந்த இடம் டாக்கா; பிரிவினைக்குப் பிறகிலிருந்து டெல்லியிலை வாழ்ந்துவாறன்; என்ர ஒரே மகள் சீதா தன்ர முஸ்லிம் காதலனோடை ஓடிப்போயிற்றாள்; அவளை எதுவுமே தடுக்கமுடியேலை; அவள் முஸ்லிமாய் மாறி அவனை முடிச்சிட்டாள்; இதுவரையில் அவளிட்ட இருந்து எதுவும் நானறியேன்; அவள் தகப்பனை மறந்துபோனாள்; ஏனெண்டால் தன்ர காதலைப்பற்றிச் சொன்னபோது கம்பு கொண்டு அவளை நான் விளாசிப்போட்டன். இப்ப அவளின்ரை வயதிலை இளம் பெண்களைக் காணிற நேரமெல்லாம் அவளின்ரை நினைவு வந்திடும்; அழுவன்; அடிக்கடி நான் அழுறதில்லையா ஐஸ்மித் தங்கச்சி?''

''ஓம் அழுகிறநீங்கள்'' என்றாள் ஐஸ்மித்.

''எங்க அந்தக் கொண்டைக் கடலை?'' சுருட்டி வைத்திருந்த சிவத்தத் துவாயிலிருந்து மினுங்கிக்கொண்டிருக்கிற கடலையைக் கிழவன் எடுப்பதைக் கிழவி அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் தனது நிலக்கரி அடுப்பைக் கூடையிலிருந்து எடுத்து நிலத்தில் வைத்தான். ஊதி ஊதி நிலக்கரிக்குச் சிவப்பேற்றினான். கடலை வறுக்கும் மணம் காற்றில் பரவியது. குழந்தை பித்துவின் மூக்குத் துவாரங்கள் விரிந்துகொண்டன. ''மாமா எனக்குக் கொஞ்சம் கடலை தாங்கோ'' என்று பிஞ்சுக் கரத்தை நீட்டியபடி சிணுங்கினாள்.

கடலைக்காரன் அவளது பிஞ்சுக்கரங்களைத் தனது முகத்துக்கு நேரே பிடித்து ஒவ்வொரு விரல்களாக முத்தம் கொடுத்தான்.

''ஓம்... ஓம்.. பொன் குஞ்சு இளவரசியே, உனக்குரிய கடலை உனக்குக் கிடைக்கும்'' என்று செல்லம் கொட்டிச் சிரித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அவன் தன் முன்வாய்ப் பல்லொன்றை இழந்திருந்தான். மற்றவையும் வெற்றிலைக்காவி படிந்து சிவந்திருந்தன. ''இவன் நிச்சயமாய் ஒரு பசாசுதான்'' என்று நினைத்துக்கொண்டாள் கிழவி. ஐஸ்மித் தனைய நடந்துவர நீரில் நனைந்து உடலில் ஒட்டிக்கொண்ட அவளது ஆடைகள் உடலின் ஏற்ற இறக்கங்களைக் காட்டிக்கொணடிருந்தமை கிழவியைச் சங்கடப்படுத்தியது. ''கடலையை வாங்கிக்கொண்டு ஆளைப் போகவிடு'' என்று சற்றுக் கடுமையான குரலில் சொன்னாள் கிழவி. ''அந்த மனுஷனைக் குடியிருக்கின்ற மற்ற ஆக்களுக்கும் கடலையைக் கொண்டுபோக விடு''

''பெரியம்மா, எனக்கெந்த அவசரமும் இல்லை; காசுழைக்க வேணுமெண்ட தேவையுமில்லை'' என்றான் கிழவன். ''ஒரு வருசத்துக்குச் சாப்பிடுவதற்குப் போதுமான அளவு காசு தபாற்பேணியிலை போட்டு வீட்டிலை வைச்சிருக்கிறன். நான் கடலை விற்க வெளியிலை வாறது ஆக்களைச் சந்திக்கத்தான். வீட்டிலை நான் தனியாள் அந்தக் குடிசையில கலகலப்பேதுமில்லை; வெளியில பிள்ளையள் சிரிக்கிறதைக் கேக்கிறன்; பொம்பிளையளின்ர மென்மையான பேச்சைக் கேட்கிறன்; அந்தச் சத்தங்கள் எனக்குள்ள சந்தோஷத்தை ஏற்படுத்துது.''

கிழவனின் பொய் புரட்டில்லாத பேச்சால் நெகிழ்ந்துபோன கிழவி கனிந்தவளாக ''நானுன்னை எதுக்கும் குற்றங் காணல்லையப்பா'' என்றாள். ''நான் என்ர மகளத்தான் எச்சரிக்கை பண்ணினனான்; பிறத்தியாக்களை நம்பாதே என்று. காலம் மாறிப் போச்சு; குறிப்பாய் எங்களுக்கு, சீக்கியருக்கு. எங்களிலை எந்தக் குற்றம் இல்லாமலே வதைபடுறம்''

''இங்கு எங்களுக்குப் பாதுகாப்பம்மா'' என்றாள் ஐஸ்மித். ''எங்களோடை எல்லாரும் நேசமாய் இருக்கினம்; ஏன் பித்துவின்ர அப்பான்ர நெருங்கிய சினேகிதங்கள் சுக்கலாஜி, தேவிதயாள் எல்லாரும் இந்துக்கள்தானே; அவை அவரின்ர இரத்த உருத்துக்கள்போல; அவர் வருத்தமாய்ப் படுக்கேக்கை நாளுக்கு இரண்டு தரம் வருவினம்; பூசா ரோட்டிலையிருக்கிற அந்த மகாராசி டொக்டரிட்டை இருந்து மருந்து வாங்கி வருவினம்.''

''அடேய்! வாத்தியார் ஐயா வாறார்'' கடலைக்காரன் உரத்துச் சொன்னான். '''ஏன் ஓடிவாறார்?''

தன்னுடைய கணவன் றோட்டு நெடுகலும் ஓடி வீடு நோக்கி வருவதை ஐஸ்மித் பார்த்தாள். ''என்ன நடந்தது?'' திடீரெனக் குரல் நடுங்கிக் கேரிடக் கேட்டாள். ''என்ன; பள்ளிக்கூடத்தில நெருப்புப் பிடிச்சிட்டுதா?''



படிப்பகம்

www.padippakam.com

அவளுடைய கணவன் முற்றத்திலிருந்த திண்ணையிலிருந்து நீல நிறத் தலைப்பாகையை விறுவிறுவெனக் கழற்றத்தொடங்கினான். குளிர்காற்று சில்லிட்டு வீசினாலும் அவனுக்கு வியர்த்து வடிந்தது. ''ஏதாவது இசகு பிசகு நடந்துவிட்டதா?'' என்றாள் கிழவி. ''உங்களைப் பார்க்க பசாசைக் கண்டவனைப்போலக் கிடக்கு''.

''இல்லையம்மா. பசாசு இல்லை; நான் கண்டது மனுசரை; பசாசிலும் பயங்கரமான மனுசரை; அவையள் எங்கட ஆக்களைக் கொல்லுகினம்; அவளைக் கொண்டுபோட்டாங்கள்''

''எவளைக் கொண்டுபோட்டாங்கள்?'' என்றாள் கிழவி.

''எனக்குக் கொஞ்சம் கடலை தாங்கோ மாமா '' பித்து குழைந்தான்.

''இந்திராகாந்தியை'' என்றான் அவன்.

''அது கடவுளுடைய விருப்பம்'' என்றாள் கிழவி. ''அகல் தகற்றுக்குள்ள ஆமியை அனுப்பிப்போட்டு; வேறெதை அவள் எதிர்பார்க்கலாம்?''

''வாயை மூடுங்கோ அம்மா'' என்றாள் ஜஸ்மித். ''எதைப் பற்றிப் பேசுறியள் என்று உங்களுக்குத் தெரியாது''

''மெய்ப்பாதுகாப்பாளர்களால் அவள் சுட்டுக்கொல்லப்பட்டாள்; இரண்டு மெய்ப்பாதுகாப்பாளரும் சீக்கியர்கள்; இப்ப சீக்கியர் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கினம், நகரம் முழுக்கக் கொலை விழுகிது, வீடு வரும் வரையில ஓடித்தான் வந்தன், அவங்கள் இஞ்ச வந்திருப்பாங்கள் எண்டு நான் பயந்துபோனன்.''

''சீக்கியரை யார் கொல்லுறது'' என்று கேட்டாள் கிழவி. ''சொல் பிறிதம், சீக்கியரை யார் கொல்லிறது? இந்துக்களா?''

''எனக்குத் தெரியாதம்மா'' . சிறுமி பித்துவுக்குக் கடலை கொடுத்தவாறே ''நீங்கள் ஏன் இப்படி ஊகிக்கிறீங்கள்?'' என்றான் கடலைக்காரன். ''நாங்கள் இப்ப என்ன செய்யிறது'' ஜஸ்மித் கேட்டாள்.

''அவங்கள் இங்க வந்தாங்களெண்டால் நாங்கள் என்ன செய்யிற? கனபேருக்கெதிரான நாங்கள் என்ன செய்யேலும்?'' என்று கேட்டான் அவளுடைய கணவன்.

''என்ன வகையான மனப்போக்கு இது மருமகன்'' கத்தினாள் கிழவி. ''இந்துக்கள் வந்து உன்ர வடிவான மனிசியை பலாத்காரம்



படிப்பகம்

www.padippakam.com

செய்யேக்கை அவர்களுக்கெதிராய் உன்ர சுண்டு விரலையும் தூக்க மாட்டியா? இதுதானா உன்ர மனப்போக்கு? நீ ஒரு உளுத்துப் போன கோழை; நீ ஒரு மனுசனில்லை; சீக்கிய சமூகத்துக்கு உன்னால அவப்பெயர்''

''அவரோட பெயர் சொல்லி கண்டபடி கதைக்கிறதை நிப்பாட்டுங்கோ'' என்றாள் ஜஸ்மித். எல்லாத்துக்கும் மேல நானொரு வயதுபோன விதவை: என்னை ஒருத்தரும் விரும்பாயினம்'' என்றாள் கிழவி. ''நானுனக்கு நெய்யும், தபால் சந்தோரிலை கணக்குத் திறக்க முன்னூறு ரூபாயும்.....''

''வீட்டுக்க ஓடுங்கோ.........'' கத்தினான் கடலைக்காரன்.

''கும்பல் இஞ்ச வந்திற்றுது '' அவன் ஜஸ்மித்தை வீட்டுக்குள் தள்ளினான்... .. பித்துவைக் கூடைக்குள் வைத்து சிவப்புத் துவாயால் மூடினான். ''குருச்சரண் ஐயா, அவளை எங்க கொண்டு போகப்போறியள்?'' கணவன் கேட்டான். ''உன்ர மனைவியையும், பிள்ளையையும் என்ர இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப் போறன்; என்ர மகள் பாகிஸ்தானிலயிருந்து வந்திற்றாள் என்று எல்லாருக்கும் நான் சொல்லுவன் .. நீ உன்ர தலைமயிரை வெட்டிக்கொண்டு ஓடித் தப்பிக்கொள்''

''என்ன நடக்கப்போகுதோ?'' என்று மார்பில் அடித்துக் கொண்டு கிழவி குழறத்தொடங்கினாள். கும்பல் அவர்களுடைய வீட்டை அண்மித்துக்கொண்டிருந்தது. தெருவின் தொடக்கத்தில் அவர்களது நண்பர்கள் வசித்துவந்த ஆறு வீடுகளுக்கு ஏற்கனவே அவர்கள் தீயிட்டிருந்தார்கள் .. .. குளிர்காலச் சூரியகிரணத்தில் தீச்சுவாலைகள் வெளித்தெரிந்தன. ''இரத்தத்துக்கு இரத்தம்'' கும்பல் கூச்சலிட்டது.

''போ; போய்ச் சண்டைபிடி; நீ ஒரு பேடி'' முற்றத்துக்கு வெளியே மருமனைத் தள்ளிக்கொண்டே கத்தினாள் கிழவி. ''கோழைபோல இருக்காத...... நீ ஒரு வீரன். எந்தக் கணமும் அதை மறக்காதே.'' கிழவி வீட்டினுள்ளே சென்று கதவைப் பூட்டிக்கொண்டாள்.

கடலைக்காரன் ஜஸ்மித்தையும் குழந்தை பித்துவையும். அழைத்துக்கொண்டு போய்விட்டிருந்தான், கிழவி மௌனமாய் அவனைச் சபித்துக்கொண்டாள். காலடிச் சத்தங்கள் முற்றத்தை நெருங்கின. ''சகோதரர்களே, நானுங்களுக்கு என்ன கெடுதி செய்தன்?'' இளஞ் சீக்கியன் தடக்கித்தடக்கி நடுங்கிக்கொண்டே கேட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

தனது மருமகன் வேதனையில் முனகுவதை இரண்டு தடவைகள் கிழவி கேட்டாள், பின்பு, கும்பல் அவனைத் திட்டித் தீர்ப்பதையும் கேட்டாள். ''வீட்டைக் கொளுத்து'' யாரோ சத்தம் வைத்தார்கள். நிலத்தில் வேர்விட்டிருப்பதைப்போல் அசைய முடியாதிருப்பதை அவள் உணர்ந்தாள். பயம் அவளை இயக்கமற்றுப் போகச்செய்தது, உரத்துப் பிராத்திக்க விரும்பினாள்; ஆனால் சத்தம் அவளது தொண்டைக்குழியிலிருந்து வெளியே வரவில்லை.

லரஜ்பத் நகரில் கடலைக்காரனின் அயலவர்கள், ''சீவிக்கிறதுக்குப் பாகிஸ்தான் நல்ல இடந்தான்'' எனப் பேசிக்கொண்டார்கள். ''நீ உன்ர மகளைப்பற்றிச் சொன்னதிலயிருந்து அவளுக்கு ஐம்பத்தினாலு வயதாவது இருக்கும் எண்டு மதிச்சம்; ஆனால் பிள்ளையப் பார்த்தால் முப்பது வயதும் மதிக்கேலாது, பாகிஸ்தான்காரர் நல்ல சாப்பாடுதான் சாப்பிடுகினம் போல.''

''சீதா, இவை என்ர அருமையான அயலட்டையாக்கள்...'' என்றான். இவையெல்லாருக்கும் தேனீர் போடுங்கோ; குழந்தைப் பிள்ளைகளுக்குப் பால் விட்டுக் கொடுங்கோ......'' ''ஓம்... ஐயா......'' என்றாள் ஜஸ்மித் மிகுந்த கீழ்ப்படிவுடன்.

— தமிழாக்கம் : சி. ஜெயசங்கர்.

கமலாதாஸ் தற்கால இந்தியப் பெண் எழுத்தாளர்களுள் முக்கியமானவர். ஆண் மேலாதிக்கம் செயல்படும் முறைகளைக் காரசாரமாக விமர்சிக்கும் வகையில் தனது வாழ்க்கையை அடிப்படையாக வைத்து 'என் கதை' (My story) என்ற நூலை எழுதியவர். இந்த நூல்மூலம் அவர் பரவலாக அறியப்பட்டார்.

கமலாதாஸினுடைய சிறுகதைத் தொகுதியான Pathmavathy the Harlot (பத்மாவதி எனும் விலைமகள்) என்ற நூலிலுள்ள சிறுகதையொன்றின் மொழிபெயர்ப்பையே இங்கு தந்துள்ளோம்.



படிப்பகம்

www.padippakam.com

# குரல்

— யாழினி பழனிவேல்

அச்சப்பட்டு வெட்கப்பட்டு
கூனிக் குறுகி
குவலயத்தில் நீ கண்டதென்ன?

தெருவில் போகும் பெண்களின்
அந்தரங்களை
அலசிப் பார்க்கும்
வேலையற்ற வீணர்கள் ஒருபுறம்.

உன்னை காட்சிப் பொருளாக்கி
காணத்துடிக்கும்
கழுகுக் கண்கள் மறுபுறம்

விடுதலை வேண்டி
நீ விடுக்கும் கோரிக்கைகள்கூட
காலாவதியாகி
கருகிப்போனது



படிப்பகம்

www.padippakam.com

உனது சுதந்திரத்தை கூட
சமூதாய நெருப்பிற்குப் பயந்து
தொலைத்து விட்டுப் போவது ஏன்?
படித்திருந்தும் நீ
இடித்துரைக்க மறுப்பதேன்?

சந்தையில் விலைபோகும்
சரக்குகளாக இருந்து கொண்டு
சம்சாரத்தை ஆளுவது விசித்திரமல்லவா?

புத்தகம் என்று
பூவையை நினைக்காதீர்
படித்து விட்டு கிழித்தெறிய.

குடையாக பெண்ணை நினைக்காதீர்
நினைத்தபோது விரிக்கவும்
நினைத்தபோது மடக்கவும்
வேண்டாதபோது மூலையில் எறியவும்.

சமுதாயம் கனவுகளை மாத்திரமே
இலவசமாய் தரும்
நீங்கள் நிஜங்களுக்காகக்
காத்திருங்கள்

அச்சத்தை முடக்கிவிட்டு
வெளிச்சத்தில் விடியலை தேடுங்கள்.
ஏவும் போதெல்லாம்
ஓய்வின்றி உழைத்தது போதும்
உனது மரத்துப்போன
உணர்வுகளை உயிர்த்தெழச்செய்.



படிப்பகம்

www.padippakam.com

# வருமானத்தை அதிகரிப்பதற்காக வீடுகளில் பெண்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள்:

## மரியா மைஸ்சினுடைய ஆய்வு.

நாசாப்பூரில் லேஸ் பின்னுபவர்கள் (Lace Makers of Nasapur) என்ற தலைப்பில் மரியா மைஸ் (Maria Mies) என்ற ஆய்வாளர் எழுதிய நூல் பிரபலமானதொரு பெண்நிலைவாத ஆய்வு நூலாகும். பால்ரீதியான வேலைப் பிரிப்பிற்கும், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளிற்கும் இடையிலுள்ள தொடர்பினை மரியா மைஸ் இந்நூலில் எடுத்துக்காட்டுகிறார். இந்த ஆய்வுபற்றிப் பெண்நிலைவாதமும் மானுடவியலும்(Feminism and Anthropology) என்ற நூலில் ஹென்றிற்றா மூர் (Henritta L. Moore) என்ற மானுடவியலாளர் எழுதியுள்ளார். அக்குறிப்பு இங்கு தமிழில் தரப்படுகின்றது. இந்தியாவின் சிறு கிராமமொன்றில் லேஸ் பின்னும் வேலையிலீடுபடும் பெண்கள் பற்றியே மரியா மைஸினுடைய நூல் விபரிக்கிறது.

எமது சமூகங்களிலும் பெண்கள் வீடுகளில் இருந்துகொண்டு வருமானத்தைப் பெருக்கக்கூடியதான முயற்சிகளில் ஈடுபடுவதை அறிவோம். எனினும் இக்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக ஆய்வுகள் போதியளவு எமது இலங்கைச் சூழலில் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாகப் பெண்கள் சுயாதீனமாக சந்தை முறைகளை ஏற்படுத்துதல் என்பது இயலாத காரியமாகவே கருதப்படுகிறது. அது பாரிய விவாதங்களிற்கு உள்ளாகும் ஒரு விடயமாகவும் அமைந்துள்ளது. தவிர, கிராமங்களில் வீடுகளில் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடும் பெண்கள் ஸ்தாபனமாவது அல்லது அவர்கள் ஒன்றுசேர்வது என்பதும் கடினமான ஒரு காரியமாகவே விளங்குகின்றது. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்கூட தனது திட்டமிடலிலும் அமுலாக்கலிலும் இப்பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. இங்கு தரப்படும் தமிழாக்கமானது நமது சூழ்நிலைபற்றிச் சிந்திப்பதற்கு ஒரு சிறு திறவுகோலாக அமையும் எனக் கருதுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

வீடுகளில் இருந்துகொண்டு வருமானத்தைப் பெருக்கும் வழி முறைகளில் ஈடுபடும் பெண்களைப்பற்றிய ஆய்வுகளில் மிகவும் சுவாரசியமானதொரு ஆய்வாக, இந்தியாவில், ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நாசாப்பூர் என்ற கிராமத்தில் லேஸ் பின்னுகின்ற பெண்களைப்பற்றிய மரியா மைஸினுடைய ஆய்வு காணப்படுகின்றது. இவர் தனது கள ஆய்வு வேலைகளை 1970களில் மேற்கொண்டதன் பயனாகப் பெற்றுக்கொண்ட தரவுகள் பின்வரும் கண்டுபிடிப்புகளிற்கு இட்டுச்சென்றது.

100,000 இற்கும் மேலான பெண்கள் லேஸ் பின்னுதல் என்ற குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய வருமானம் மிகவும் குறைந்தளவில் காணப்படுகின்றது. இக்கைத்தொழில் ஏறத்தாழ நூறு வருடங்களாக இருந்துவருகின்றது. இங்கு பின்னப்படும் லேஸ்களில் ஏறத்தாழ முழுவதுமே ஐரோப்பா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் தனியார் ஏற்றுமதியாளரில் பெரும்பகுதியினர் நல்ல வருமானத்தை இக்கைத்தொழிலிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர். இக்கைத்தொழிலினால் ஆந்திரப் பிரதேச அரசு பெருந்தொகையான அந்நியச் செலவாணியைச் சம்பாதித்துக்கொள்கின்றது. கிறிஸ்தவ மிசனரிகள் 1870 – 1880கள் வரையுள்ள காலப்பகுதியில் பெண்களினது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் ஒரு வழிமுறையாக இதனை ஆரம்பித்ததினாலேயே இக்கைத்தொழில் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் மிசனரியே லேஸ்களை விற்பதற்கான ஒழுங்குகளைக் கவனித்துக்கொண்டது. பின்னர் வர்த்தக வழிமுறைகள் இக்கைத்தொழிலிலேயே அபிவிருத்தியாகத் தொடங்கின. அதன்பிறகு லேஸ் உற்பத்தியும் ஒழுங்குபடுத்தப்பட்டது. இப்பொழுது ஒரு முறைமையில் இக் கைத்தொழில் இயங்குகின்றது.

ஒரு குறிப்பிட்ட முகவரால் பெண்களிற்கு வீடுகளில் நூல் விநியோகிக்கப்படும். அம்முகவர் ஒரு குறிப்பிட்ட நாளில் லேஸ்களைப் பெற்றுக்கொள்வதாகக் கூறிச்செல்வார்; பின்னர் அக்குறிப்பிட்ட தேதியில் இம்முகவர் திரும்பவும் வந்து லேஸ்களைப் பெற்றுக்கொண்டு பெண்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுவார்.

வேலையானது இங்கு இத்தனை லேஸ் பின்னினால் இவ்வளவு பணம் என்று (Piece rate basis) நடைபெறும். இம்முகவர் பின்னர் லேஸ்களை ஏற்றுமதியாளருக்குக் கையளிப்பார். இவ்வுற்பத்தி முறைமையானது ஏற்றுமதியாளருக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது. ஏனெனில் ஏற்றுமதியாளர் கட்டிடங்களிலோ அல்லது



படிப்பகம்

www.padippakam.com

இயந்திரங்களிலோ எவ்வித முதலீட்டையும் மேற்கொள்ளமாட்டார். இதனால் உற்பத்திச் செலவுகள் தொழிலாளர்களாலேயே பொறுப்பேற்கப்படுகின்றன. இதனால் கூலி தொடர்பான செலவானது இலகுவில் ஒழுங்கமைக்கப்படுகின்றது. கேள்வி (Demand) குறைகின்றபோது யாரையும் வேலையால் விலக்கத்தேவையில்லை. கேள்வி கூடும்போதும் புதிய பிரச்சினை எதையும் எதிர்நோக்கத் தேவையில்லை. ஏனெனில் புதிதாகப் பெண்களை இலகுவில் உற்பத்திச் செயற்பாட்டில் சேர்த்துக்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

1970 களுக்குப் பின்னால் லேஸ் கைத்தொழிலானது பாரியளவிலான விஸ்தரிப்புக்குள்ளானது. வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் சந்தை வாய்ப்புகள் அதிகரித்தமையே இதற்கான காரணமாகும்.

பாரிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுடைய பங்களிப்பின் மறைமுகத் தன்மை தொடர்பாக மைஸ் இரு விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றார். முதலாவதாக பொதுவாக ஒரு வீட்டினுடைய வேலைசார்ந்த அந்தஸ்து அவ்வீட்டின் ஆண் தலைவரினாலேயே வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது என்பதாகும். இரண்டாவதாக, பெண்களின் வேலை என்பது மறைமுகமாக இருப்பதற்கான காரணமாக 'மனையாள்' (house wife) என்ற கருத்தியல் இருப்பதை மைஸ் விளக்குகின்றார்.

பெண்கள் தமது பொழுதுபோக்கு நேரத்தைப் பயனுள்ளதாக்கும் ஒரு வேலையாகவே லேஸ் பின்னுதல் வேலை கணிக்கப்பட்டு வருகின்றது மேலும் ஒழுங்கமைப்பு முறைமையும் இம் மறைமுகத்தன்மைக்குக் காரணமாக இருப்பதாக மைஸ் கூறுகின்றார். அதாவது பெண்கள் செய்கின்ற தனித்த கூறுகள் முகவரால் திரட்டப்பட்டு பின்னர் இன்னொரு பெண்ணிடம் ஒன்றாக்கப் படுவதற்காகக் கொடுபடும். இதனால் தனித்த கூறுகளை உற்பத்தி செய்யும் பெண்களுக்குத் தாங்கள் உற்பத்தி செய்கின்ற லேஸ் களின் மொத்த உற்பத்தி எவ்வளவு எனத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு இல்லாதுபோகின்றது. இவ்வாறாக உற்பத்திமுறை கூறுகளாக்கப்படுதல் என்பது ஏற்றுமதியாளர்களால் விரும்பப் படுவதாக இருக்கின்றது. இம்முறையினால் சுயாதீனமாக சந்தை முறைகளைப் பெண்கள் ஏற்படுத்திக்கொள்வது தவிர்க்கப்படுகின்றது மேலும் பெண்கள் வீடுகளில் வேலையில் ஈடுபடுவதால் பெண்கள் தொழிலாளர் குழுக்களாக ஒன்றுசேர்வதும், ஏற்றுமதியாளரை எதிர்கொள்வதும் கடினமாகவுள்ளது.

இங்கு ஏற்றுமதி அல்லது சந்தைப்படுத்துதல் என்ற செயற்பாடு தனியே ஆண்களாலேயே செய்யப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். இதனால் ஒரு குடிசைக் கைத்



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாக அல்லது வீடுகளில் செய்கின்ற வேலையாக லேஸ் பின்னுதல் என்ற ஒழுங்கமைப்பை விளங்கிக்கொள்ளவும்; 'மனையாள்' (housewife) என்ற கருத்தியலில் தொழிலாளர்களை விளங்கிக்கொள்ளவும் வேண்டுமானால் இவ்விடயமானது உற்பத்தி, மீளுற்பத்தி என்ற இரு தளங்களின் தொடர்பை விளக்கிக்கொள்ள வேண்டும் என மைஸ் கூறுகின்றார். அதாவது சமூக வாழ்வையும் பொருளாதார வாழ்வையும் ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பார்ப்பதனாலேயே இவ்விளங்கிக்கொள்ளலை ஏற்படுத்தமுடியும் என மைஸ் கூறுகின்றார்.

லேஸ் கைத்தொழிலில் பிரதான தொடர்புகளை அல்லது உற்பத்தி உறவுகள் எவ்வாறானவை எனப் பார்த்தால் அவை ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள், முகவர்கள், லேஸ் பின்னுபவர்கள் ஆகியோருக்கு இடையேயானதாகும். மைஸ் முன்வைக்கும் கருத்தின்படி லேஸ் பின்னுதல் எனும் வேலையானது விவசாயத் துறையில் ஏற்பட்டுவந்த மந்த நிலையுடனும் தொடர்புடையது. இதனால் வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே கூடுதலாக, வருமானத்தினை மேலதிகமாகத் தேடிக்கொள்ளும் ஒரு வழிமுறையாக லேஸ் பின்னும் வேலையை எதிர்கொள்கின்றனர். இவ்வேலையானது பெண்களுடைய வேலையாக இருப்பதாலும், பெண்களை விலத்திவைத்தல் / ஒதுக்கிவைத்தல் (female seclurism) எனும் செயற்பாட்டுடன் தொடர்புடையதாலும், சாதி அடிப்படையிலான வேறுபாடுகள் இருப்பதாலும் வர்க்கம் என்ற விடயம் லேஸ் பின்னும் பெண்களைப் பொறுத்தவரை சிக்கலானதாக இருக்கின்றது.

மைஸின் ஆய்வின் கண்டுபிடிப்புகளுக்கமைய வறுமைக்கும், லேஸ் பின்னும் வேலைக்குமான தொடர்பினை நோக்கும்போது இன்னும் ஒரு விடயத்தை நாம் அவதானிக்கலாம். விவசாயம் செய்கின்ற அல்லது ஏனைய கூலிவேலை செய்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே லேஸ் பின்னும் வேலையில் ஈடுபடுகின்றனர். ஆகக்குறைந்தது எனச் சமூகத்தினால் மதிக்கப்படுகின்ற சாதியினர் இவ்வேலையில் ஈடுபடுவதில்லை என மைஸ் கூறுகின்றார். பெண்களை ஒதுக்கிவைத்தல் என்பது சமூக அந்தஸ்துடன் தொடர்புடைய விடயமாகும். இங்கு காபு சாதியினரின் அந்தஸ்துடன் சேர்த்து நோக்கப்படவேண்டிய விடயமாகப் பெண்களை ஒதுக்கிவைத்தல் எனும் விடயம் காணப்படுகின்றது. மைஸின் ஆய்வில் 66%மான லேஸ் பின்னும் பெண்கள் காபு சாதியைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் வர்க்க அந்தஸ்தின் உயர்ச்சியானது கூலி வேலையை நிராகரிப்பதனூடாக, குறிப்பாகப் பெண்கள் வீட்டிற்கு வெளியில் செய்யும் வேலைகளிலிருந்து விலக்குவதனூடாக ஏற்படுத்தப்படுகின்றது. இவ்வாறாகக் கருத்தியல் சார்ந்தும்



படிப்பகம்

www.padippakam.com

பொருள் சார்ந்தும் ஏற்படுத்தப்படும் 'மனையாள்' என்கின்ற வரைவிலக்கணமானது உலகின் பல்வேறு பாகங்களிலும் அனேக சமூகங்களில் காணப்படக்கூடியதாக இருக்கின்றது. இங்கு வீடு (ஒரு உற்பத்தியிடமாக), தனியாளின் அந்தஸ்து என்ற இரு கருத்துக்களும் பெண்களை வீட்டிலிருப்பவராக்குதல் (domestication of women) எனும் செயற்பாட்டுடன் தொடர்புடையது என்பதைக் கவனிக்கலாம்.

லேஸ் பின்னும் பெண்களில் தொண்ணூறு வீதமானோர் கிறிஸ்தவர்களாவர். இதனால் 'மனையாள்' எனும் கிறிஸ்தவக் கருத்தியலும், பெண்களை ஒதுக்கிவைத்தல் என்ற காபு சாதியினரின் கருத்தியலும் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளுடன் சேர்ந்து இயங்குவது லேஸ் கைத்தொழிலுக்குக் குறைந்த செலவிலான பெண் தொழிலாளர்களை வழங்குவதற்குச் சார்பாக இருப்பதாக மைஸ் கூறுகின்றார். உற்பத்தி உறவுகள், மீள் உற்பத்தி உறவுகள் என்பன இங்கு சேர்ந்து இயங்குவதால் பால்நிலை உறவுகளின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தாத வகையில் அல்லது பால் அடிப்படையிலான வேலைப் பிரிப்பை மாற்றாத வகையில் பெண்கள் தமது வீடுகளிற்கு மேலதிக வருமானத்தை ஈட்டித்தரக்கூடியதாக இருக்கின்றது என மைஸ் கூறுகின்றார். அதனால் சந்தையடிப்படையின் உற்பத்தி முறைமையானது முதலாளித்துவம் சார்ந்த முறைமையில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளல் என்பது நிலவுகின்ற பால்நிலை உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

மரியா மைஸ்சினுடைய ஆய்வு இங்கு ஏன் சுவாரசியமானதொரு ஆய்வாகக் கொள்ளப்படுகின்றது எனில் வேலைத்தளம், வீடு ஆகிய இரண்டிற்குமிடையே பிரிப்பை ஏற்படுத்தாமலேயே பெண்கள் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் என்பதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது. மேலும் பெண்களுக்கு மனையாள் (house-wife) எனும் பாத்திரத்தையும், தொழிலாளி எனும் பாத்திரத்தையும் சேர்ப்பதற்கான ஒரு வாய்ப்பினை லேஸ் உற்பத்தி வழங்குகின்றதாயினும் யதார்த்தத்தில் பெண்களைச் சுரண்டுவது என்பது இந்த இணைப்பினை ஏற்படுத்துவதாலேயே சாத்தியமாகின்றது என்பது மைஸின் கருத்து.

— தமிழில் : கமலினி.



படிப்பகம்

www.padippakam.com

# முழு நிலவு

— அனா ப்ளாண்டியானா.

வா, நிலவே
தூக்கத்திலிருந்து எங்களை உசுப்பி எழுப்பு
வா, உனது வலையை
எங்களது தண்ணீரில் வீசு
எங்களை வெளியே இழுத்துப் போடு
எங்களை எங்களுக்கு வெளியே எடுத்துக் கொட்டு
உறக்கமற்ற வானத்தில்
எங்களைச் சுதந்திரமாக விட்டுவிடு
எங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாதுதான்
தூக்கத்தில் தோய்ந்து தோய்ந்து
எங்களது நுரையீரல்கள் வெறும் மூச்சுக் குழாய்களாக
மாறிப் போயிருந்தாலும் போயிருக்கலாம்.

ஆனால்,
எந்தவொரு ஆபத்து வந்த போதிலும் எங்களை எழுப்பு
எங்களைச் சுதந்திரமாக, தனியாக
கடலில் விட்டுவிடு
அளவற்ற கவனிப்புடன்
கடலின் பரப்பு மீது
கோலங்கள் இடையறாது மாறிக் கொண்டிருக்கும்
அலைகளின் மீது
இழுத்துக் கட்டப்பட்ட இறுக்கமான கயிறு போன்ற
தொடுவானத்தின் மீது
ஆறுதலாக முன்னேற.
இரண்டு நரகங்களுக்கிடையில்
உனது கண்ணில் கரைந்துவிட்ட எங்கள் கண்கள்
நம்பிக்கைப் பித்துப் பிடித்த எங்கள் கண்கள்.

ருமேனியாவின் புகழ்பெற்ற பெண் கவிஞரான அனா ப்ளாண்டியானா உரைநடை, படைப்பிலக்கியம், மொழியாக்கம், சிறுவருக்கான கதைகள் ஆகியவற்றிலும் சிறந்து விளங்குகிறார். ருமேனியாவின் முன்னாள் அதிபர் சிசெஸ்கோவின் ஆட்சியை விமர்சித்ததன் காரணமாக 1988-இல் அவரது நூல்கள் தடைசெய்யப்பட்டு அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இப்போது ருமேனியாவின் ஆளும் கட்சியை எதிர்த்து நிற்கும் அரசியல் இயக்கமொன்றில் முனைப்பாகப் பணியாற்றுகிறார். இக்கவிதையின் ஆங்கில மொழியாக்கம் இடம்பெற்றுள்ள சஞ்சிகை: Index on Censorship, Vol. 21, No. 9.

நன்றி: அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# புதிய குரல்கள்

— செ.யோ. —

இன்று பெண்களிடையே எழுத்தாளர்களும், கவிஞர்களும், ஆய்வாளர்களும் எண்ணிக்கையில் அதிகரித்துவருகின்றனர். இவர்களது அக்கறைகளையும் ஆர்வங்களையும் அறிந்துகொள்வதற்கு இந்த நூல்களைத் தொகுத்து நோக்குவது உதவும். அத்துடன் எமது எழுத்துலகில் பல்வேறு காரணங்களால் பின்தள்ளப்படும் பெண் எழுத்தாளர்கள் பரவலாக அறியப்படவும் வேண்டும். புதிய குரல்கள் என்ற இப்பகுதியில் தொண்ணூற்றி ஏழாம் ஆண்டு வெளிவந்த இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள்பற்றிய அறிமுகம் இடம்பெறுகிறது.

## சிறுகதை

- **உணர்வின் நிழல்கள் — யோகேஸ்வரி சிவப்பிரகாசம், மல்லிகைப் பந்தல் வெளியீடு, மார்ச் 1997.**

*நீண்ட காலமாக எழுதிவரும் யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் பதினான்கு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. பல சிறுகதைகளில் மனித மனங்களின் நுண்ணுணர்வுகள் கச்சிதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைப் போராட்டங்கள் ஆரம்பித்த காலந் தொடக்கம் அண்மைக்கால 'மீள்குடியேற்றம்' வரையிலான யாழ்ப்பாண மக்களின் சிதைந்த வாழ்க்கைக் கோலங்களை வெளிப்படுத்தும் சிறுகதைகள் சிறந்த பதிவுகள். இயல்பான, நறுக்கான, செறிவான உரையாடல்கள் ஊடாகப் பல கதைகள் நகர்வது பாராட்டிற்குரியது.*



படிப்பகம்

www.padippakam.com

○ ஒரு தேவதைக் கனவு — கெக்கிறாவ ஸஹானா,
மல்லிகைப் பந்தல் வெளியிடு, பிப்ரவரி 1997.

சில வருடங்கள் முன்பாக 'மல்லிகை' அறிமுகப்படுத்திய கெக்கிறாவ ஸஹானாவின் பதினைந்து சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. கதைகள், குடும்பப் பொறுப்பு, ஏழ்மை, பண்பாட்டின் ஆதிக்கம், இவை காரணமாக நிறைவேறமுடியாத காதல் என்பனபற்றிப் பேசுகின்றன. ஆசிரியை தான் சார்ந்த சமூகத்தின் 'மட்டுப்படுத்தப்பட்ட' எல்லைக்குள் நின்று சமூகத்தைப் பார்ப்பது தெரிகின்றது. ஜெயகாந்தனின் எழுத்துக்களால் பாதிக்கப்பட்ட ஒரே ஒரு ஈழத்துப் பெண் எழுத்தாளர் இவரென்பது பாராட்டிற்குரியதாயினும் இவரின எழுத்துக்கள் இன்னமும் முதிர்ச்சியை நாடி நிற்கின்றன. இத்தொகுப்பினூடாக, புதியதொரு பிரதேசம் ஈழத்து இலக்கிய உலகினுள் வந்து கலப்பது மகிழ்ச்சிக்குரியது.

○ நாளைக்கு இன்னொருத்தன் — ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்,
குமரன் வெளியீடு, சென்னை; ஜூன் 1997.

தனது ஐந்து நாவல்களுடாக நன்கு அறியப்பட்ட ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் முதற் சிறுகதைத் தொகுப்பு. ஏறத்






படிப்பகம்

www.padippakam.com

தாழ இருபத்தைந்து ஆண்டுகளாக சிறுகதைகள் எழுதிவருபவ ராயினும் எண்பதுகளுக்குப் பின்னர் எழுதிய சிறுகதைகளே இதில் இடம்பெற்றுள்ளன. ஈழத்தைப் பின்னணியாகக் கொண்ட சில கதைகளாயினும் சரி, லண்டனைப் பின்னணி யாகக்கொண்ட பல கதைகளாயினும் சரி பெண்களின் பழைய, புதிய துயரங்களின் குரல்களாகியுள்ளன. புகலிட நாடொன் றில் தமிழ்ப் பெண்கள் ஆண்களால் அனுபவிக்கும் இன்னல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. சில கதைகளை (எ டு: நாட கங்கள் தொடரும்) வாசித்தபின் ஏற்படும் மன அதிர்வுகள் நீண்டகாலம் கேட்கக்கூடியன.

- வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் — கோகிலா மகேந்திரன், கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை; ஜூலை 1997.

புனைகதைத் துறையில் நீண்டகாலமாக ஈடுபட்ட, பலரும் அறிந்த கோகிலா மகேந்திரனின் பதினொரு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. பெரும்பாலும் இருவகைப் போக்குகள் கொண்ட கதைகள் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளருக்கு நன்கு பரிச்சயமான பாடசாலை உலகம்பற்றி, ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவுகள்பற்றி - பேசுவன, ஒருவகை; அவை, உளவியல் பார்வை கொண்டவை. போர்ச் சூழலைக் களமாகக் கொண்டவை, இன்னொரு வகை; இத்தகைய படைப்புகளுள் சில, காணாமற்போன மனிதம்பற்றியும், எஞ்சி யிருக்கும் மனிதம்பற்றியும் சித்திரிப்பது கவனிப்பிற்குரியதே.

## கவிதை

- செல்வி - சிவரமணி கவிதைகள் — தாமரைச்செல்வி பதிப்பகம், சென்னை.

ஏற்கனவே, இலங்கையில் வெளிவந்த சிவரமணி கவிதைகள் (பெண்கள் ஆய்வு வட்டம் 1993) என்ற தொகுப்பில் இடம் பெற்ற சிவரமணியின் கவிதைகளும், இதுவரை நூலுருப் பெறாத செல்வியின் எட்டுக் கவிதைகளும் (அத்துடன் செல்வி எழுதிய சில கடிதங்களும்) கொண்ட தொகுப்பு. பெண்நிலை வாத நோக்கில் இதுவரை பெண்கள்பற்றிச் சொல்லாத சில விடயங்களும் ஈழத்து விடுதலைப் போராட்டம் பற்றிய சிற் சில விமர்சனங்களும், போர்க்காலப் பயங்கரங்களும் கவித்துவம் பொருந்தும் 'கவிதை'களாகியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

## ஆய்வு

- நான் ஒரு பெண் — பெண்கள் தொடர்பான 'சரிநிகர்' கட்டுரைகளின் தொகுப்பு (1990 - 1996), பாரதி வெளியீட்டகம், கொழும்பு; மே 1997.

  பெண்நிலைவாதம் தொடர்பாக இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளை இவ்வாறு வகைப்படுத்தலாம். (i) பெண்களும் குடும்ப உறவுகளும் (ii) பெண்களும், சட்டமும், சமூகமும் (iii) பெண்களும் தேசிய விடுதலைப் போரும் (iv) பெண்களும் யுத்தமும் (v) பெண்களும் கலாசாரமும் (vi) பெண்களும் மதங்களும். இவற்றுள், முதலிரு வகைகளுள்ளும் அடங்காத ஏனைய வகைக்குள் அடங்கும் கட்டுரைகள் புதிய சிந்தனைகளை வழங்கக்கூடியன; ஒரு சில கட்டுரைகள் மறு விவாதங்களுக்கு இட்டுச்செல்வன. ஈழத்தில் வெளியான பெண்நிலைவாதம் சார்ந்த தொகுப்புகளுள் முக்கியமான தொகுப்பு இது வென்பதில் ஐயமில்லை.

- தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு — செல்வி திருச்சந்திரன்.

  பெண்நிலைவாத நோக்கிலான ஆய்வு நூல்கள் வரிசையில் அண்மையில் சேர்ந்துள்ள குறிப்பிடத்தக்கதொரு ஆய்வுநூல். மூன்று பகுதிகளாக அமைந்துள்ள இந்நூலில், முதற்பகுதியில் பெண்நிலைவாதப் பார்வைபற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் பேசப்படுகின்றன; அவை, தமிழ்ச் சமூக, இலக்கிய மரபுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் யாழ்ப்பாணச் சமூகத்தின் கட்டமைப்பும், இப்பின்புலத்தில் தேசவழமைச் சட்டத்தின் சமூகப் பெறுமானங்களும் அலசப்படுகின்றன. மூன்றாம் பகுதியில், பெண்நிலைவாதம் தொடர்பான பல்வேறு செய்திகள் விவாதிக்கப்படுகின்றன. இன்னொரு தளத்தில் நின்று பார்க்கும்போது தமிழ்ச் சமூகத்தில் சமயம், சாதி, வர்க்கம் என்னும் பிரிவுகளுக்கிடையிலான பண்பாட்டுக் கட்டுமானங்களை இனங்கண்டு அவை எவ்வாறு அரசியல் பொருளாதார உருவாக்கங்களுக்கு உதவி செய்தன என்பதையும் இந்நூலின் கட்டுரைகள் வெளிப்படுத்த முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- கட்டவிழும் முடிச்சுக்கள் — பதிப்பாசிரியர்: சுல்பிகா இஸ்மாயில், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி, செயல், முன்னணி, கொழும்பு, 1997.

  தமிழில் வழங்கும் சில பழமொழிகள்பற்றிய பெண்நிலைவாத நோக்கிலான மூன்று கட்டுரைகளின் தொகுப்பு. கட்டுரை



படிப்பகம்

www.padippakam.com

களை செல்வி திருச்சந்திரன், கௌரி பழனியப்பன், சுல்பிகா இஸ்மாயில் ஆகியோர் எழுதியுள்ளனர். புதிய சில சிந்தனை களை முன்வைத்து இவ்விடயம் தொடர்பாக மேற்கொண்டும் ஆய்வுசெய்யத் தூண்டும் இச் சிறிய நூலின் வரவு 'கடுகு சிறிதாயினும் காரம் பெரிது' என்ற பழமொழியை நினை வூட்டுகின்றது.

## சஞ்சிகைகள்

- நங்கை — இதழ் : 13-97; ஆசிரியர்: சரோஜா சிவச்சந்திரன், மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.

  பல்வேறு தடைகள் மத்தியிலும் தொடர்ந்து வரும் ஒருசில பெண்கள் சஞ்சிகைகளுள் 'நங்கை' குறிப்பிடத்தக்கது. கவிதை, சிறுகதை மிகச் சிலவாகவும், கட்டுரைகள் பலவாகவும் இடம் பெற்றுள்ளமை திருப்தி தருகின்றது. அறிவியல் சார்ந்த கட் டுரைகளும், சர்வதேச பெண்கள் தொடர்பான கட்டுரைகளும் அவற்றுள் பரவலாக உள்ளமை ஏனைய பெண்கள் சஞ்சிகை களின் கவனத்திற்குரிய விடயமாகின்றது. இவ்விதத்தில் சிறிய கட்டுரையாயினும், 'பெண்களுக்கெதிரான வன்முறையின் பிறப் பிடமாகிவரும் கணனிகள்' (எழுதியவர்: சரோஜா சிவச்சந் திரன்) என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது; மறு பிரசுரம் செய்யப்படவேண்டியது.

- நிவேதினி — பால்நிலைக் கற்கைநெறிச் சஞ்சிகை — மலர்: 1, 2; இதழ்: 1, 2; இரட்டை இதழ் 1996 / 1997; இதழாசிரியர்: கலாநிதி செல்வி திருச்சந்திரன்; பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம், கொழும்பு.

  இலங்கையிலிருந்து வரும் குறிப்பிடத்தக்க இன்னொரு ஆய்வுச் சஞ்சிகை. பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகளும், ஆய்வுக் கட்டுரைகளும் (எ-டு: பெரியாரின் பெண் விடுதலைக் கருத் துக்கள், நவீன தமிழ்க் கதைகள் – ஒரு பெண்ணிய நோக்கு, தேசவழமைச் சட்டத்தின் சமூகப் பெறுமானங்களும் யாழ்ப் பாணத்துப் பெண்களின் சமூகப் பாங்கும், தேயிலைத் தோட் டங்களின் பெண்கள்) பெண்நிலைவாத நோக்கில் சிறுகதைத் தொகுப்பு (வாழ்தல் என்பது - திருக்கோயில் கவியுவன்), திரைப்படம் (பிரியங்கா) பற்றிய விமர்சனங்களும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளமை பயன் மிகுந்தது.



படிப்பகம்

www.padippakam.com

- பெண்ணின் குரல் — ஜூன் 97, இதழ்: 15;
  பெண்ணின் குரல் அமைப்பு, கொழும்பு.

குறிப்பாக, பெண்கள் அக்கறை செலுத்தவேண்டிய – அதே வேளையில் போதிய அக்கறை செலுத்தப்படாத விடயங்களுள் 'பெண்களின் சுகாதாரம்' பற்றிய சிரத்தை முக்கியமானது. இவ்விடயம்பற்றி மேலும் நுண் ஆய்வு செய்யும்போது 'பெண்களின் இனப்பெருக்க உரிமைகள்' பற்றிய கவனிப்பு வெளிச்சத்திற்கு வருகின்றது இப்பின்னணியில், 'பெண்ணின் குர'லின், இவ் இறுதி இதழ் 'இனப்பெருக்க உரிமைகள்'பற்றிக் கவனத்திற்கொண்டு, பன்னிரு தலைப்புக்களில் சிந்தனைக்குரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது; கல்ஹாரி சதுரிகா விதாரணவின் முகப்புச் சித்திரம் பாராட்டிற்குரியதே.

- '21ஆம் நூற்றாண்டை முன்னோக்கி' — பீஜிங் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கைந்நூல்; இலங்கை அரசசார்பற்ற பெண்கள் நிறுவனங்களின் கூட்டு, கொழும்பு; ஜூலை 1997.

1995இல் பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் மகாநாட்டில் இனங்காணப்பட்ட பெண்கள் தொடர்பான பன்னிரு விடயங்களை, இலங்கைச் சூழலில் நடைமுறைப்படுத்துவதற்காக, பின்னர் நடைபெற்ற இலங்கைப் பெண்களின் செயலமர்வொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும், செயற்பாடுகளும்பற்றிய மொழிபெயர்ப்புத் தொகுப்பு. அத்தகைய விடயங்களைப் பெண்கள் மத்தியில் எடுத்துக்கூற மிக வாய்ப்பான வழிவகை; பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துதல் என்ற தீர்மானத்திற்கமைய நூலின் இரண்டாம் பகுதி, சுவரொட்டிகள், குறுநாடகங்கள், தெருக் கூத்துக்கள், வானொலி நிகழ்ச்சிகள் என்பனபற்றி விமரிக்கின்றது. செயலமர்வில் தெரிந்தெடுத்த மாதிரிச் சுவரொட்டிகளும், நாடகப் பிரதிகளும் நூலில் இடம்பெற்றுள்ளன. நூலின் முதற்பகுதி, குறிப்பிட்ட பன்னிரு விடயங்களை பிரபல ஓவியக் கலைஞரான திருமதி சிபில் வெத்தசிங்கவின் வரைகோட்டுச் சித்திரங்களூடாக வெளிப்படுத்துகின்றது. மூன்றாம் பகுதி, செயலமர்வில் கலந்துகொண்ட பெண்கள் அமைப்பு பற்றிய விவரங்களையும், ஊடகங்கள் பற்றிய அறிவினைப் பெறுதற்குத் தொடர்புகொள்ளவேண்டிய ஆலோசகர்கள் பற்றிய விவரங்களையும் தருகின்றது. மிக முக்கியமான இந்நூலில் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்; சில மொழிபெயர்ப்புப் பதப்பிரயோகங்கள் பற்றியும் கவனித்திருக்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஐதிகம்

மியுறியல் லுக்கேய்ஸர்.

நெடுநாட்களின் பின்பு,
முதியோனும் பார்வையிழந்தவனுமான இடிபஸ்
தெருக்களில் அலைந்தான்.
பரிச்சயமானதொரு வாசனையை அவன் நுகர்ந்தான்.
அது ஸ்பிங்ஸ்*.

''நானொரு கேள்வி கேட்கவேண்டும்'' என்றான் இடிபஸ்.
''என் தாயை என்னால் ஏன் இனங்கண்டுகொள்ள முடியவில்லை?''
''நீ தவறான விடையைத் தந்தாய்'' என்றான் ஸ்பிங்ஸ்.
''ஆனால், அதுதான் எல்லாவற்றையும் சாத்தியமாக்கியது''
என்றான் இடிபஸ்.

''இல்லை'' என்றான் ஸ்பிங்ஸ்.

''காலையில் நாலு கால்களிலும்
மதியத்தில் இரண்டு கால்களிலும்
மாலையில் மூன்று கால்களிலும் நடப்பது எது?
என்று கேட்டபொழுது
நீ, மனிதன் என்று விடையளித்தாய்,
மனுஷி பற்றி எதுவுமே நீ சொல்லவில்லை.''

''மனிதன் என்று சொல்லும் பொழுது
அதனுள் மனுஷியும் அடங்கி விடுகிறது.
அது எல்லோரும் அறிந்தது'' என்றான் இடிபஸ்.

''நீ நினைக்கின்றாய் அப்படி'' என்றான் ஸ்பிங்ஸ்.



படிப்பகம்

www.padippakam.com

* இக் கவிதையில் குறிப்பிடப்படும் ஸ்பிங்ஸ், சிங்கத்தினுடைய உடலும் பெண்ணினுடைய தலையும் கொண்ட சிறகுகளையுடைய பிராணி. இது தன்வழியில் எதிர்ப்படுபவர்களை பொருத்தமான விடையளிக்க முடியாத புதிர்போட்டு அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இதனால் அதென்ஸ் நகரமே கலக்கமுற்றுக்கிடந்தது.

காலையில் நாலு கால்களிலும்; மதியத்தில் இரண்டு கால் களிலும் மாலையில் மூன்று கால்களிலும் போவதெது என்பதுதான் கேள்வி.

''மனிதன்'' என்ற பதிலை அளித்ததன் மூலம் இடிபஸ் அந்தப் புதிரை விடுவித்தான், அதன்பிறகு ஸ்பிங்ஸை அவன் கொன்றான். இதற்கு வெகுமதியாக தீபஸ் ராச்சியமும்; ராணி ஜோகஸ்ராவின் கரம் பற்றும் 'பாக்கியமும்' அவனுக்குக் கிடைத் தது.

மியிறியல் லுக்கேய்ஸர் (1913 – 1980) இந்தக் கிரேக்க ஐதிகத் தைப் புதிய வியாக்கியானத்திற்குட்படுத்தி, மனித நாகரிகத்தில் பெண்ணின் இடத்தையும், இருப்பையும் பற்றிய பிரக்ஞையைக் கவித்துவமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

தமிழாக்கமும் குறிப்பும் :
சி. ஜெயசங்கர்.





படிப்பகம்

www.padippakam.com

# காணாமல் போனவர்களுக்கான ஆணைக் குழுக்கள்

## சாட்சியமளித்தோருக்குப் பதில் என்ன ?

இலங்கை ஜனாதிபதியால் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்ட காணாமற்போனவர்கள் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுக்கள் தமது அமர்வுகளை 1997ஆம் ஆண்டு மே மாதம் முடித்துக்கொண்டன. இக்குழுக்கள் தமது அறிக்கைகளை ஜூலை மாதம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த அறிக்கைகள் இன்னும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் அவை சார்பாக எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறித்தும் ஜனாதிபதி எதுவும் தெரிவிக்கவில்லை.

மூன்று வெவ்வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுக்கள் 1988 ஜூலை தொடக்கம் காணாமற்போனோர் பற்றிய முறைப்பாடுகளை ஆராய்ந்தது. இக்குழுக்களுக்கு 40,000 பேர் சாட்சியம் அளித்துள்ளனர்.

இவ் ஆணைக்குழுக்கள் விசாரணைகளை நடத்தும்போது பல இடைக்கால அறிக்கைகளை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தனர். இவை இன்னும் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஆணைக்குழுக்களுக்குச் சாட்சியமளித்தவர்களில் பெரும்பாலோர் பெண்களாவர். அதிகாரமும் பலமும் உடைய சக்திகளால் தமக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலையும் தீங்கையும் பாராது இவர்கள் துணிந்து முறைப்பாடு செய்தனர். பல குடும்பங்கள் காணாமற்போன நபர்கள் தொடர்பாக இழப்பீடுகளைப் பெற்



படிப்பகம்

www.padippakam.com

றன. காணாமற்போனதைத் தொடர்ந்து ஒரு வருட காலப்பகுதி முடிவுற்றதால் மரண சான்றிதழ் கோரி விண்ணப்பித்து இழப்பீட்டிற்கு உரிமை பெறலாம்; எனினும் பல குடும்பங்கள் மரணம் ஏற்பட்டுள்ளது என விசாரணகளின்றி ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், உண்மையை வெளிப்படுத்தி இச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பது அரசின் கடமையாகும் எனத் தெரிவித்துள்ளன.

ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பதாக இருப்பின் அவற்றில் முக்கியமான சில விடயங்கள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என வற்புறுத்த விரும்புகிறோம்.

குடும்ப அங்கத்தவர்களை இழந்த பெண்களின் பிரச்சனைகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். குடும்பத் தலைவிகளாகக் காணப்படும் பெண்கள், தொழில்வாய்ப்பு, போதியளவு வருமானம், பயிற்சி ஆகியவை தேவைப்படுவோராக உள்ளனர். அத்துடன் தொழிலில் ஈடுபடவும், குடும்பப் பொறுப்பினைத் தாங்குவதற்கும் சமூக ஆதரவு தேவைப்படுபவர்களாகவும் உள்ளனர்.

மேலும் காணாமல்போனமை தொடர்பான சம்பவங்களினால் ஏற்படும் மன அதிர்ச்சியையும், தமக்கும் முழுக் குடும்பத்திற்கும் ஏற்படும் ஏனைய விளைவுகளையும் கையாள உதவி தேவைப்படுபவர்களாகவும் உள்ளனர். மேலும் கணவனை இழந்தோர் குறித்து சமூகத்தில் காணப்படும் இகழ்ச்சியான கருத்தை எதிர் நோக்கவேண்டியவர்களாகவும் உள்ளனர்.

அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிவாரணத்திற்கான கொள்கைகளும் திட்டங்களும் வகுக்கப்படின் அவை மேலே குறிப்பிட்ட விடயங்கள்பற்றி அக்கறை செலுத்தவேண்டும்.

காணாமற்போதல் சம்பவங்கள் அதிகளவில் நடைபெற்ற இம் மூன்று பிரதேசங்களில் பணிபுரியும் அக்கறையுள்ள பொது நிறுவனங்கள், பெண்கள் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றின் ஆலோசனைகளை இது தொடர்பாக அரசாங்கம் பெற்றுக்கொள்ளவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

எத்தனை ஆயிரம் வருடத்தைய
'கட்டு' இது
எந்த மந்திரத்தாலும்
அவிழ்க்க முடியாதபடி?

'பெண்'

கற்பனைகளில் காலூன்றி
சிருஷ்டிக்குத் தயாராக,
மனித சிருஷ்டிப்பிலே மட்டுமே
மனம் மயங்கி, மயங்கி......

'பெண்' என்ற வடிவமைப்பு
அழகாய்,
பொறுமையாய்...
தியாகப் பெருவெள்ளமாய்...
தெய்வமாய், இன்னுமின்னுமின்னும்...

அந்தர வெளிகளில் அலைய விடப்பட்ட பெண்,

மனுஷி என்ற நினைவு வரும்
வேளைகளில்
பேயாகவும் உணர்த்தப்படும்.

அவிழ்க்க அவிழ்க்கத்
தயாராகும் புது மந்திரங்கள்
எவ்வளவு காலத்தைய 'கட்டு' இது
காலநதியில் கரைத்து விடப்பட்டு
நிறமூர்த்தங்களில் ஊறி, ஊறி...

முதலில்
கற்பனை வெளிகளை விட்டுத்
தரையில் கால் பதிப்போம்,
பின்னர்,
கட்டுகளை அவிழ்ப்போம்
எங்கள் பரம்பரையலகுகளில் தொடங்கி...

— வாசுகி. ஜெ.



படிப்பகம்

www.padippakam.com

# சிந்திக்கவும் செயற்படவும்:

## சில தகவல்களும், குறிப்புகளும்.

— சித்ரா —

"அன்று நான் கூலிவேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்து மதிய உணவை முடித்துக்கொண்டு எனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றேன், அருகில் இராஜேஸ்வரியின் வீடு உள்ளது. அந்த வேளை இராஜேஸ்வரியை அவரின் கணவன் ஆறுமுகம் அடிப்பதைக் கண்டேன். இருவருக்குமிடையில் பலத்த சண்டை நடந்தது. அவர்களை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். அவர் தினமும் குடிப்பது வழக்கம். அதனால் தினமும் இருவருக்குமிடையில் சண்டை ஏற்படுவது உண்டு.

சம்பவ தினம் வழமைபோல் சண்டை நடந்தது. ......இரவு 8 மணிபோல் அவர் இரத்த வெள்ளத்தில் மயக்கமாகக் கிடப்பதைக் கண்டேன். வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல முடியாததால் இறந்துவிட்டார்.''

இவ்வாறு வாழைச்சேனை கல்மடு அகதி முகாமில் கடந்த 27-8-97 அன்று கணவனால் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் க. இராஜேஸ்வரி (வயது 22) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியளித்த மு. கே. சாந்தரநாதன் கூறினார்.

— வீரகேசரி, 22-9-97.

''அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் அகதி முகாமில் உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த இளம் பெண் (28 வயது)



படிப்பகம்

www.padippakam.com

ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி மட்டக் களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ......சாந்தி என்ற இப்பெண்ணும் எழுந்து ஓடும்போது துப்பாக்கிச் சன்னம் முதுகைத் துளைத்துக்கொண்டு சென்றது.''

— வீரகேசரி, 27-4-97.

''......எனது மகள் கமலாதேவி (20) தனது 5 மாதக் குழந்தையைத் தன்னோடு வைத்துக்கொண்டு குப்புறப் படுத்தார். அப்போது அங்கு ஒரு ஷெல் பாரிய சத்தத்துடன் வெடித்தது. மகள் அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தாள். குழந்தை காயம் பட்டு வீரிட்டது. நான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு பாது காப்பான இடம் தேடி ஓடினேன்.''

கல்மடு அகதி முகாமில் இறந்த நால்வரின் மரணவிசாரணையில் சாட்சியம்.

— வீரகேசரி, 26-4-97.

மேற் குறிப்பிட்டவை போன்ற சம்பவங்களை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம், பத்திரிகைகளில் வாசிக்கிறோம்.

இந்தச் சம்பவங்களை எல்லாம் திரட்டி நோக்கும்போது இவையாவும் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளாக உள்ளமை விளங்கும்.

குடும்ப - சமூக வன்முறைகள், அரசியல் நெருக்கடி, போர் நிலை காரணமாக நடைபெறுகின்ற வன்முறைகள் என இவற்றைப் பொதுவாக இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

இறப்பு, அங்கவீனம், உள அதிர்ச்சி ஆகியவற்றுக்கு இந்த வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்கள் ஆளாகின்றனர்.

இவற்றுடன் தம்மைத்தாமே அழித்துக்கொள்ளும் தற்கொலை முயற்சிகளும் தற்காலத்தில் அதிகரித்துள்ளன.

இவை குறித்து அக்கறையுடன் விளங்கிக்கொள்வதும், நடவடிக்கை எடுக்கவேண்டியமையும் எமது சமூகத்திற்கு முன்னுள்ள கடமைகளாகின்றன.

1997ஆம் ஆண்டு நடைபெற்றவையாக வீரகேசரிப் பத்திரிகையில் இடம்பெற்ற செய்திகளையும், மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் பெறக்கூடியனவாக இருந்த பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மேலே கூறிய பிரச்சினைகளின் உக்கிரம் புரியவரும்.



படிப்பகம்

www.padippakam.com

**பலாத்காரம் :**

மட்டக்களப்பின் யுத்தச் சூழல் பொதுவாக யாவரையும் பாதித்தாலும் பெண்களை அது மேலதிகமாகக் குரூரமாகத் தாக்குகிறது. பெண் என்ற அவளது உயிரியல் நிலை அடிப்படையில் அவள் பாலியல் தொந்தரவுகளுக்கும், பலாத்காரத்திற்கும் உட்படுத்தப்படுகின்றாள். சமூகத்தில் நடக்கின்ற இத்தகைய நிகழ்வுகள் பொதுவாக வெளியே பேசப்படுவதில்லை. ஆனால் இராணுவம் இத்தகைய செயல்களில் ஈடுபடும்போது அவற்றில் சிலவாவது முறையிடப்படுகின்றன.

பத்திரிகைச் செய்திகளை வைத்தும், வைத்தியசாலைப் பதிவுகளை வைத்தும் நோக்கும்போது 1997ஆம் ஆண்டு பெண்களைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய பத்துச் சம்பவங்களை அவதானிக்கலாம். இவற்றில் இரண்டு, சிறுமியர் பலாத்காரப்படுத்தப்பட்டமை ஆகும்.

இந்த இரண்டும் தவிர ஏனையவை இராணுவத்தினர், பொலிஸ் ஆயோரால் செய்யப்பட்ட பலாத்காரங்கள் ஆகும்.

இவற்றுள் இரு சம்பவங்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை வெளியிட்டதுடன், அவற்றை ஆராயுமாறு அரசாங்கத்தையும் கோரியிருந்தது. வழக்குகள் தாக்குதல் செய்யப்பட்டபோதும் இவற்றினால் எத்தகை நிவாரணமோ, ஆறுதலோ இப்பெண்களுக்குக் கிடைக்கவில்லை.

**மரணம், காயம், அங்கவீனம் :**

அண்மைக் காலமாக இராணுவத் தாக்குதல்கள், இரு தரப்பாரினதும் நேரடி மோதல்கள் இவற்றில் பொதுமக்கள் அகப்பட்டுப் பாதிக்கப்படுவது அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இவற்றால் காயங்களுக்கும், மரணத்திற்கும் உள்ளாகும் பெண்களின் தொகை அதிகரித்துவருகிறது. அகதி முகாம்களில் வசிப்போர், சந்தையில் வியாபாரம் செய்வோர், அன்றாடக் கருமங்களுக்காகப் பொதுப் போக்குவரத்துச் சாதனங்களில் பிரயாணம் செய்வோர், விறகு பொறுக்குவதற்காகக் காட்டுப்புறத்திற்குச் செல்வோர் எனப் பலரும் குண்டுத்தாக்குதல்களிலும், கண்ணி வெடிகளிலும் அகப்பட்டுக்கொள்கிறார்கள். கண்மூடித்தனமான ஷெல்வீச்சு, இலக்கற்ற துப்பாக்கிச்சூடு ஆகியவற்றாலும் பெண்கள் கொலை செய்யப்படுகின்றனர்; பாரதூரமாகக் காயப்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

14-5-97 அன்று ஷெல் தாக்குதலில் வெம்பு கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மை எனும் பெண் இறந்தார். அவருடன் சேர்ந்து முறையே 35 வயது, 19 வயதுடைய இரு பெண்களும், 13 வயதுச் சிறுமியும் காயமுற்றனர். தொடர்ந்து 25-5-97 இல் செங்கலடியில் ஷெல் வீச்சில் 6 பெண்கள் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாத்திரம் மூன்று பெண்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவங்கள் வாழைச்சேனை, செங்கலடி, நாசிவன்தீவு ஆகிய கிராமங்களில் நடைபெற்றன.

மக்கள் அதிகமாகக் கூடும் சந்தை போன்ற இடங்களில் குண்டு வெடிப்புகள், தாக்குதல்கள் இடம்பெறுவது இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. 1997 இல் செங்கலடிச் சந்தையில் நடைபெற்ற தாக்குதல், டிசம்பர் மாதம் 9ஆம் திகதி மட்டக்களப்பு நகர்ச் சந்தையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு என்பன பலரைப் பலி கொண்டவையாகும்.

செங்கலடியில் மு. கோவிந்தசாமி எனும் கீரை விற்கும் பெண் (55 வயது) கொல்லப்பட்டார்.

விஸ்வம்மா எனப்படும் 50 வயதுப் பெண் மட்டுநகர்ச் சந்தையில் கொல்லப்பட்டதுடன் மேலும் 29 பெண்களும் காயத்திற்கு உள்ளாகினர்.

பஸ்வண்டிகளில் பிரயாணம் பண்ணும்போதும் இத்தகைய அபாயங்கள் ஏற்படுகின்றன.

மண்டூர் கொலனியில் பஸ்வண்டியில் பிரயாணம் செய்த தங்கம்மா என்ற 28 வயதுப் பெண் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். டிசம்பர் மாதம் 2ஆம் திகதி களுதாவளையில் பஸ் வண்டியில் குண்டு வெடித்ததால் 21 வயதுடைய தர்சினி தர்மலிங்கம் என்பவர் பாதிக்கப்பட்டார். இச்சம்பவம் நடந்தபோது இப்பெண் 5 மாதக் கர்ப்பிணியாகவும் இருந்தார்.

வயிற்றிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. கர்ப்பச்சிதைவு ஏற்பட்டது மாத்திரமன்றி காலில் ஏற்பட்ட பாரதூரமான காயத்தில் முழங்காலுக்கு மேல் காலைத் துண்டிக்கவேண்டியும் ஏற்பட்டது.

பெண்களுக்கு ஏற்படும் காயங்களோ மரணங்களோ அவர்களது வாழ்விலும், அவர்களைச் சார்ந்தோரின் வாழ்விலும் குறிப்பாகக் குழந்தைகளின் வாழ்விலும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

மேலே குறிப்பிட்ட கல்மடு அகதிமுகாம் சம்பவத்தில் இறந்த கமலாதேவி என்னும் பெண்ணுடைய 5 மாதக் குழந்தைக்கு என்ன நடந்தது? இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட கமலாதேவியின் வயதான தாயார் எத்தகைய மன அழுத்தங்களுக்கு ஆளானார்? இந்தக் குடும்பத்திற்கு என்ன உதவிகள் தேவைப்படும் என்பவை போன்றதெல்லாம் முக்கியமான விடயங்கள் ஆகும்.

## அதிர்ச்சி, உளச்சோர்வு, தற்கொலை :

பொருளாதார நெருக்கடி, மோசமான வறுமை, கணவன் மனைவி சண்டை, திக்கற்ற நிலை. பல்விதமான வன்முறைகள், போதியளவு குடும்ப, சமூக ஆதரவின்மை போன்றவற்றால் பெண்கள் மத்தியில் உளச்சோர்வு, விரக்தி போன்றவை ஏற்படுகின்றன. சில பெண்கள் மனநோய்க்கு உள்ளாகின்றனர். சிலர் தற்கொலை செய்கின்றனர்.

வளவு எல்லை பற்றிய சண்டையில் அயல்வீட்டுக்காரரால் அடிக்கப்பட்ட, கொம்மாதுறையைச் சேர்ந்த பெண் உளவியல் தாக்கத்திற்கு உள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பொது மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறாமல் வருந்துவோரையும், இத்தகைய பாதிப்புகளுடன் வாழ்க்கையில் பிடிப்பற்று நடைப்பிணம்போல் வாழ்பவர்களின் கதைகளையும் நாம் அறிவோம்.

இத்தகைய உளச்சோர்வும், காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வருவதால் உளரீதியாகப் பலவீனமடைந்திருப்பதும் பெண்களைத் தற்கொலை முயற்சிகளுக்கும் தள்ளிவிடுகிறது.

1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையுள்ள 4 மாத காலத்தில் மட்டக்களப்பு வைத்தியசாலைப் பதிவுகளையும், வீரகேசரிப் பத்திரிகைச் செய்திகளையும் சேர்த்து நோக்கும்போது 23 தற்கொலை முயற்சிகளைக் காணலாம். இந்தப் பெண்கள் யாவரும் பெரும்பாலும் இளம் வயதினர்; பதினெட்டு வயதிலிருந்து நாற்பது வயதுவரையுள்ள பெண்கள். இவர்களில் இரண்டு பேர் மரணமடைந்தனர். இருவரும் இளந் தாய்மார்கள். திருக்கோயிலைச் சேர்ந்த 30 வயதுடைய கலைமதி தனது இரு குழந்தைகளுக்கும் நஞ்சூட்டி தானும் நஞ்சு அருந்தி இறந்தார். இது 1997 ஜனவரி மாதத்தில் நடந்தது. வெல்லாவெளியைச் சேர்ந்த இன்னொரு 26 வயதுத் தாயும் மே மாதம் தனது இரு குழந்தைகளையும் நஞ்சு பருக்கிக் கொன்றபின் தானும் தற்கொலை செய்துள்ளார். இத்தற்கொலைகளுக்குக் காரணம் கணவனுடன் சண்டை, வறுமை, மன உளைச்சல் எனக் கூறப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

1997ஆம் ஆண்டு பங்குனி மாதம் மாத்திரம் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட 7 பெண்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேபோல ஜூன் மாதம் 12 பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் அலறி விதை, மண்ணெண்ணை, பெற்றோல், மலத்தியோன் பவுடர் போன்றவற்றை உட்கொண்டு தற்கொலை செய்ய முயன்றுள்ளனர்.

வறிய, கிராமப்புறத்துப் படிப்பறிவற்ற பெண்கள்தாம் வகையறியாது தற்கொலைக்கு முயல்கின்றனர் என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் இது உண்மையல்ல; விரக்தியினாலும், உள அழுத்தங்களினாலும் தற்கொலை முயற்சியில் ஈடுபடுதல் சகல மட்டத்துப் பெண்கள் மத்தியிலும் காணப்படுகிறது. நகர்ப்புற, மத்தியதர வர்க்கத்துப் பெண்களிலும் சிலர் தம்மை மாய்த்துக்கொள்ள எத்தனிக்கின்றனர். மட்டக்களப்பு நகரில் 1997 இல் நடைபெற்ற இரு தற்கொலைகள் இதற்குச் சான்றாகும்.

இத்தகைய தற்கொலை முயற்சிகள் ஏன் நடைபெறுகின்றன என்பது சமூகம் மிகவும் அக்கறைப்படவேண்டிய விடயமாகும். உயிர் வாழும் நாட்டமே மனிதரில் இயல்பாகவும் அதிகமாகவும் உள்ளது. ஆனால் தன்னையே அழித்துக்கொள்ளும் எண்ணம் ஏன் உருவாகிறது? இத்தகைய நிலைக்குப் பெண்கள் ஏன் தள்ளப்படுகின்றனர் என்பது முக்கியமான வினாவாகும்.

பெண்களுடைய தற்கொலைகள் குறித்துப் பொதுவாக ஆராய்ந்தோர் இதற்குக் காரணம் மோசமான மன அழுத்தங்களே என்று கூறுவர்.

பொருளாதார நெருக்கடி, பலவிதமான வன்முறைகள், திக்கற்ற நிலை, போதியளவு குடும்ப, சமூக ஆதரவின்மை போன்றவற்றினால இந்த மன அழுத்தங்கள் ஏற்படுகின்றன.

எனவே தற்கொலை முயற்சி என்பது ஒரு அறிகுறிதான். இதன் பின்னாலுள்ள ஆழமான காரணங்கள் ஆராய்ந்து அறியப்படவேண்டும்.

மேலே நான் குறிப்பிட்ட விடயங்கள் பெண்கள் இன்று எதிர்கொள்ளும் சமூக, அரசியல் வன்முறைகளுக்குச் சில உதாரணங்களாகும்.

பெண்களுடைய அபிவிருத்தி என்பது அவர்களுக்குப் பொருளாதார ரீதியாக உதவி அளிப்பது மாத்திரமல்ல, அவர்கள் உயிர் வாழும் உரிமையுடனும், பாதுகாப்புடனும் வாழ்வதை உறுதிப்படுத்தச் செய்யவேண்டிய நடவடிக்கைகளுமாகும்.

பாதிப்புகளைக் குறைப்பதும், பாதிப்புக்குள்ளானோருடைய பௌதிக, உளவியல் தேவைகளைக் கவனித்தலும் இதில் மிக முக்கியமானதாகும். மட்டக்களப்பின் பொது நிறுவனங்கள் இவை பற்றி அக்கறைப்படவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# வருடாந்த சந்தா — பெண்

| | | |
|---|---|---|
| ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஷ்திரேலியா | : | US $ 20/- |
| இந்தியா | : | US $ 10/- |
| இலங்கை | : | ரூபாய் 100/- |

**சந்தா விண்ணப்பம் 199..............**

*பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.*

*பெயர்* : ..........................................................................

*விலாசம்* : ..........................................................................

*திகதி* : ..........................................................................

*இத்துடன் காசோலை / மணி ஓடரை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின்பேரில் அனுப்பிவைக்கிறேன்.*

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
27 A, லேடி மனிங் ட்றைவ்,
மட்டக்களப்பு,

**Suriya Women Development Centre,**
**27 A, Lady Manning Drive,**
**Batticaloa,**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# சூரியா நூலகம்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு நூல் நிலையம் உண்டு. இங்கு பெண்கள் தொடர்பான வையும், ஏனைய சமூக விஞ்ஞானம் தொடர்பான நூல்களும் உள்ளன. அத்துடன் பெரும்பாலும் பெண்கள் எழுதிய நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத் தொகுதிகள் ஆகியவற்றையும் சூரியா நூலகம் சேகரித்து வைத்துள்ளது. பெண்கள் சம்பந்தமான சஞ்சிகைகளும், சமகாலத் தகவல்களைக் கொண்ட பிரசுரங்களும் சூரியா நூல் நிலையத்தில் உள்ளன. இவை தவிர தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளையும் நூல் நிலையம் தருவிக்கின்றது. சாதாரண வாசகரிலிருந்து சமூக விஞ்ஞானத் துறைகள், பெண்ணியல் ஆய்வுகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர், ஆய்வாளர் வரை பலருக்கும் இங்குள்ள நூல்களும், ஆவணங்களும் பயன்படக்கூடியவை. பெண்கள் தொடர்பான விவரண வீடியோப் படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியவையும் உள்ளன.

இந்நூல் நிலையம் வெள்ளி தவிர்ந்த வார நாட்களில் மு. ப. 9-00 மணியிலிருந்து பி. ப. 5-00 மணிவரை திறந்திருக்கும். அத்துடன் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கும் திறந்திருக்கும்.

நூலகத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டணங்கள் ஏதுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com




# நினைவுக்குறிப்பு ஒன்று

மரணங்களால் நிறைந்துவிட்ட நமது நாட்டில் மரணம் மிகச் சாதாரணமானதுதான். ஆயின் சிலரது மறைவுகள் அசாதாரண மானவை. அவரைச் சுற்றியுள்ள குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் இழப்பைக் கொடுப்பனவாக அவை அமைகின்றன. அவ்வகையான இழப்பைத் தன் மறைவால் ஏற்படுத்தியவர் திருமதி கிறேஸ் நகுலா தங்கராஜா *(1933 – 1997)* அவர்கள்.

அவர் ஆசிரியையாக, இலங்கைச் சாரணியர் சங்க மாவட்ட ஆணையாளராக, கிறிஸ்தவ இளம் பெண்கள் சங்கத் தலைவியாக, சிறைக்கைதிகள் சங்க உபதலைவியாக, கிறிஸ்தவ பாட ஆலோ சகராகக் கடமையாற்றியவர். சேவைக்காகத் தன்னை அர்ப்பணித் தவர். மட்டக்களப்பில், சமூக வாழ்வில் ஈடுபட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய பெண்களில் ஒருவராக இருந்தார்.

முகம் நிறைந்த சிரிப்பாலும், மனம் நிறைந்த அன்பாலும் அகதிகளையும் அனாதைகளையும் பெண்களையும் அரவணைத்த வர். அவர்களுக்கு, நிறுவனங்கள் மூலமாகவும், தன்னாலான உதவி களைச் செய்ததுடன் தானேயும் உதவி செய்தவர். பெண்களுக் குப் பாரம்பரியமான, பாரம்பரியமற்ற தொழிற்பயிற்சிகளை வழங்குவதில் முன்னின்று உழைத்தார். அவர் சூரியாவின் பெண் கள் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்களில் ஆர்வம் கொண்டிருந் தார்.

அவரது சேவைமனப்பாங்கும் குணநலனும் கொண்ட பெண் கள் பல உருவாகவேண்டும் என விரும்புகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

சூரியா ஆலோசனைக் குழு:

அம்மன்கிளி முருகதாஸ்
இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி
ஓட்றி றிபேரா
கமலினி கதிர்வேலாயுதபிள்ளை
குமுதினி சாமுவேல்
சரளா இமானுவேல்
சித்திரலேகா மௌனகுரு
சுனிலா அபயசேகர
சூரியகுமாரி பஞ்சநாதன்
நதீரா மரியசந்தனம்
வாசுகி ஜெயசங்கர்.

சூரியா அலுவலர்கள்:

சிறிவள்ளியம்மன் சிதம்பரப்பிள்ளை
கிரிஜா இரத்தினசிங்கம்
விஜயகுமாரி முருகையா
யுமுனா இப்ராஹிம்
ஜெயந்தி தளையசிங்கம்.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.
Composed by S. Singarajah.

படிப்பகம்

www.padippakam.com

“தூங்கிக் கிடக்கும்
துடிப்புக்களை எவ்வாறெனினும்
துயில் எழச் செய்ய வேண்டும்.
துன்பம் சேர்க்கும்
இந்தத் துயிலில் இனித்தோய வேண்டாம்.

மௌனமாக,
மனதில் குமுறி
மாண்டு போகவும் வேண்டாம்
இந்தத் துயிலை எவ்வாறெனினும்
இல்லாதொழிக்க வேண்டும்.”

படிப்பகம்